01 - 16


# Saturday மெயில்

16-01-2010
பக்கங்கள்: 24
விலை: 15/=

සැටඩේ මේල්

*A Fascinating Weekly Bulletin*


# தேர்தல் திருவிழாவில் நல்லூர் வழிபாடு



கடந்த சில தினங்களாக நல்லூர்க் கந்தன் ஆலயப் பகுதி களைகட்டிப் போயுள்ளது. நடப்பதெல்லாம் நனவா, கனவா என்று மக்கள் தம்மைத்தாமே கிள்ளிப் பார்த்துக் கொள்ளுமளவுக்கு நல்லூர்க் கந்தனை நாடி இந்த நாட்டின் ஜனாதிபதியே வந்து 'திருமேனி'யராகி வழிபட்டு வரம் கேட்டுச் சென்றுள்ளார்.

நல்லூரை நாடி வந்தவர் ஜனாதிபதி மட்டுமா? எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி வேட்பாளரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சரத்பொன்சேகா, கடவுளைக் கட்டிக் கடலில் போடவேண்டுமென்ற கொள்கையுடைய சோமவன்ச அமரசிங்க எனப் பெரும் பட்டாளங்களே எமது நல்லூரான் காலடி வந்து பவ்வியமாக வணங்கிச் சென்றுள்ளனர்.

இவர்களின் நல்லூர் விஜயத்தின் போது இவர்களுக்கு ஆதரவாகவன்றி இவர்களின் கூத்துகளை வேடிக்கை பார்ப்பதற்கென்று நல்லூர் வீதியில் கூடிய கூட்டமே அதிகம். அரசியல் வாதிகளின் படையெடுப்பால் நல்லூர் வீதியில் கடை வைத்திருப்பவர்களுக்கு நல்லூரானின் கிருபையால் வியாபாரம் நன்றாக நடந்தது.

வேட்டி சகிதம் மேலாடை துறந்த திருமேனியர்களாகவும் நெற்றியில் பட்டை, விபூதி பூசி சந்தன, குங்கும திலகமிட்டு கைகளில் காளாஞ்சிகளுடனும் கண்களில் கருணையுமாக பக்திப் பழங்களாக நல்லூரானை

(2ஆம் பக்கம் பார்க்க)

Registered as a Newspaper at G.P.O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரு மனது படைத்த வாடிக்கையாளர்கள்




வேலைவாய்ப்பு இல்லாதிருக்கும் பெண்மணியொருவர் வருமான வரியைச் செலுத்தத் தவறியமைக்காகப் போலந்து இறைவரித் திணைக்களம் 23 இலட்சம் ஸ்லொட்டீஸை (8 இலட்சத்து 20 ஆயிரம் டொலர்கள்) அபராதமாக அறவிட்டிருக்கிறது.

விபசாரியாக சம்பாதித்த ஒருகோடி 37 இலட்சம் ஸ்லொட்டீஸை இந்தப் பெண்மணி சம்பாதித்திருந்தார். அதற்கான வருமான வரியையே அவர் செலுத்தவில்லை.

தன்னிடம் வரும் வாடிக்கையாளர்கள் பெருமனது படைத்தவர்கள். தனக்கு அள்ளி வழங்கியதாக போலந்தின் தென்பகுதி நகரான கடோவிஸில் இறைவரித் திணைக்கள அலுவலகத்தில் அப்பெண்மணி கூறியதாக போலந்து தினசரியான 'கசெட்டா வைபோர்க்சா' இவ்வாரம் செய்தி வெளியிட்டிருக்கிறது.

தனது வாடிக்கையாளர்களில் ஒருவர் 1997-2002 கால கட்டத்தில் 50 இலட்சம் ஸ்லொட்டீஸை தனக்குத் தந்ததாக பெண்மணி கூறியதாக பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# இது ஒரு நினைப்பு விவகாரம்

ஆண்கள் தினமும் 13 தடவைகள் பாலியல் உறவைப் பற்றி நினைக்கிறார்கள். one poll.com என்ற இணையத்தளம் மேற்கொண்ட அபிப்பிராய வாக்கெடுப்பின் மூலம் இது தெரியவந்திருக்கிறது.

பெண்கள் தினமும் சராசரியாக 6 தடவைகள் பாலியல் உறவைப் பற்றி நினைப்பதாக இந்த வாக்கெடுப்பின் முடிவுகள் கூறுகின்றன என்று இவ்வார ரைம்ஸ் ஓஃப் இந்தியா செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஆண்கள் தினமும் சராசரியாக 12 தடவைகள் பாலியல் உறவைப் பற்றி சிந்தித்தாலும் அவர்கள் வாரம் இரு தடவை அல்லது வருடத்தில் 104 தடவை பாலியல் உறவை வைத்துக்கொள்கிறார்கள். பாலியல் உறவைப்பற்றி நினைத்துக் கொண்டிருப்பதில் ஆண்கள் பெயர் போனவர்களாக இருந்தாலும் பாலியல் உறவை வைத்துக் கொள்ளும் தடவைகளைப் பொறுத்தவரை அவர்களில் 75 சதவீதமானவர்களே மகிழ்ச்சியும் திருப்தியும் அடைகின்றதாகவும் வாக்கெடுப்பில் தெரிய வந்திருக்கிறது.



தேர்த...
(முன்பக்கத் தொடர்ச்சி)

வலம் வந்த இந்த பக்த கோடிகளைப பார்க்க ஆயிரம் கண்களும் போதாது.

தமது பாதுகாப்புக்காக கவச குண்டலங்களுடனும் சுற்றிலா மெய்ப்பாதுகாவல் படையுடனும் வலம் வந்த இந்த அரசியல்வாதிகள் நல்லூரான் மீது வைத்த அதீத நம்பிக்கையினால் போலும் மேலாடை துறந்த வெற்று மார்பு களுடனும் சுற்றிலா வரும் சூரர் படைகளை விளக்கியும் நல்லூர் கந்தனை நாடி வரம் கேட்டதை பார்த்தபோது எமக்கு கொஞ்சம் பெருமிதமாகத்தான் இருந்தது.

ஆனால், நல்லூர் கந்தனின் நிலைதான் சங்கடமாகிவிட்டது. யுத்த காலத்தில் போது நல்லூர் கந்தனைச் சூழவாழும் மக்களும் ஆபத்தை ஏற்படுத்திய சரத் பொன்சேகா வந்து அடுத்த ஜனாதிபதியாக தன்னை ஆக்கும்படி கேட்கிறார். அவருக்கு ஆதரவாக சிறிது காலம் யுத்தநிறுத்தம், சமாதான பேச்சு என்ற திட்டங்களை முன்னெடுத்ததால் சில ஆயிரம் உயிர்களைக் காப்பாற்றிய ரணில் விக்கிரமசிங்கவும் வரம் கேட்கிறார். கடவுள் மீது நம்பிக்கையற்ற சிவப்புச் சட்டைக்காரரான சோம வன்ச அமரசிங்க கூட என்னை நம்பி வந்து நிற்கிறார்.

மறு புறத்திலோ இந்த நாட்டின் ஜனாதிபதியே வந்து தன்னை ஜனாதிபதி பதவியில் தொடர விடுமாறு மன்றாடுகிறார். அவர் பரிவாரங்களோ அது செய்வோம் இது செய்வோம் என வேண்டுகின்றனர்.

இந்த இருவரில் ஒருவருக்கு எப்படியேனும் வாக்களிக்க வேண்டிய நிலை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது போல். இவர்கள் இருவரில் ஒருவருக்கு அருள்பாலிக்க வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டு விட்டதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார மெயிலில் இவர்...



# ஷேய்க் ஹசீனா

இந்திய உபகண்டத்தின் அதிஉயர் விருதுகளில் ஒன்றான இந்திராகாந்தி சமாதான விருது பங்களாதேஷின் பிரதமர் ஷேய்க் ஹசீனாவுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், தன்னால் தாயென மதிக்கப்படும் முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியின் இவ்விருதைப் பெற்றுக் கொள்ளும் தகுதி தனக்கு இருக்கிறதா இல்லையா என்று தெரியவில்லை என்றும் தமது குடும்பமே படுகொலை செய்யப்பட்டபோது எங்கு செல்வதெனத் தெரியாது தத்தளித்த நிலையில் தம்மை ஆதரித்த ஒரேயொரு தலைவி இந்திராகாந்தி தான் எனவும் விருதை பெற்றுக்கொண்ட பின் உரையாற்றுகையில் ஹசீனா குறிப்பிட்டுள்ளார்.

ஹசீனாவின் குடும்பம் படுகொலை செய்யப்பட்டது முதல் இந்தியா ஹசீனாவை ஆதரித்ததன் பயனாகவோ என்னவோ இந்தியா-பங்களாதேஷ் உறவு களங்கமில்லா வலுவான உறவாக இருந்து வருகின்றது.

அதைவிட, ஹசீனாவைத் தலைமையாகக் கொண்ட பங்களாதேஷ் அரசு இந்தியாவின் கைப்பிள்ளையாகச் செயற்படுகின்றது என்று கூறுதல் சாலப் பொருத்தமானதாகும்.

இந்திராகாந்தியால் வளர்த்தெடுக்கப்பட்ட ஷேக் ஹசீனா பங்களாதேஷ் அரசியல் வரலாற்றில் மிகமுக்கிய பங்களிப்புடன் ஜனநாயக ஆட்சி செலுத்தி வருகின்றார்.

தம்நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக முழுக் குடும்பத்தையுமே அரசியல் பலிக்கடாவாக்கிய வரலாறு ஆசியாவில்தான் உண்டு.

அதாவது, பாகிஸ்தானில் பூட்டோ குடும்பமும் பங்களாதேஷில் ஹசீனா குடும்பமும் தான் ஜனநாயகத்துக்காகத் தமது குடும்பங்களையே இழந்துள்ளன.

இது இவ்வாறிருக்க ஷேக் ஹசீனாவின் அரசியல் பயணத்தைப் பற்றி சற்று நோக்கினால்;

பங்களாதேஷின் ஸ்தாபகத் தந்தையும் முதல் ஜனாதிபதியுமான ஷேய்க் முஜீபூர் ரஃமானிற்கு 1947 செப்டெம்பர் 28 இல் புதல்வியாகப் பிறந்த ஹசீனா, ஏடன் கல்லூரியில் 1960 இல் நடைபெற்ற மாணவர் ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து அரசியலில் தன்னைப் பிரவேசித்துக் கொண்டார்.

பின்னர் 1968 இல் சர்வதேச புகழ்ச்சி பெற்ற அணு விஞ்ஞானியான எம்.ஏ.வஷாட் மியாவை மணம் புரிந்த ஹசீனாவுக்கு இரு பிள்ளைகள் உண்டு.

1971 இல் நடைபெற்ற விடுதலைப் போரின் போது ஹசீனா தனது முதல் மகன் மற்றும் தாய், சகோதரர்களுடன் வீட்டுக்காவல்ல் தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம தந்தையார் பாகிஸ்தானில் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இவ்வாறாக பங்களாதேஷில் அரசியல் குழப்பம் நிறைந்த 1970 இன் பின்னரான தசாப்தத்தின் மத்திய காலப் பகுதியான 1975 ஆகஸ்ட் 15 இல் ஹசீனாவின் முழுக் குடும்பமுமே இராணுவச் சதிப்புரட்சியால் படுகொலை செய்யப்பட்டது.

ஆனால், ஜேர்மனிக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தமையால் அதிர்ஷ்டவசமாக ஹசீனாவும் அவரது சகோதரி ஒருவரும் உயிர்தப்பினர்.

பின்னர் பிரிட்டன், இந்தியா ஆகிய நாடுகளில் அகதி அந்தஸ்துக் கோரி தங்கியிருந்த ஹசீனா 1981 வரை இந்தியாவில் அஞ்ஞாதவாசத்தைக் கொண்டிருந்து பின்னர் 1981 இன் பிற்பகுதியில் பங்களாதேஷுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இந்தியாவில் வசித்த காலப்பகுதியிலேயே அவாமி லீக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட ஹசீனா பங்களாதேஷ் திரும்பிய பின்னர் தந்தை முஜிபூர் ரஃமான் படுகொலை செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து பங்களாதேஷில் இழுபறிநிலையில் இருந்த அரசியலுக்கு முற்றுப்புள்ளியாக 1996 இல் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது. அதில் வெற்றிபெற்று முதல்தடைவையாக பிரதமரானார் ஹசீனா.

தொடர்ந்து 2001 தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட அவாமி லீக், பிரதான எதிர்க்கட்சியானபோது ஹசீனாவைக் கொலை செய்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் 2005 தேர்தலில் பெரும்பான்மையுடனான வெற்றிபெற்ற அவாமி லீக் 2007 தேர்தலைப் புறக்கணித்தது. இதனைத் தொடர்ந்து அவசர காலநிலை பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில், அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஹசீனா பங்களாதேஷ் வருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதுடன், ஊழல் குற்றச்சாட்டில் ஹசீனாவுக்கு எதிரான பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டது.

பின்னர் பிடியாணை இடைநிறுத்தப்பட்டு பயணிப்பதற்கான தடையும் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து 2007 மேயில் நாடு திரும்பிய ஹசீனா ஜூலையில் கைது செய்யப்பட்டு 2008 ஜூனில் விடுதலை செய்யப்பட்டார்.

பின்னர் 2008 டிசம்பர் தேர்தலில் வெற்றிபெற்று மீண்டும் 2009 ஜனவரியிலிருந்து பங்களாதேஷ் பிரதமராகப் பதவிவகித்து வருகின்றார்.

பங்களாதேஷில் ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்த தனது குடும்பத்தையே பலியாக்கியும் தொடர்ந்தும் நல்லாட்சிக்கு அயராது பாடுபடும் ஹசீனாவுக்கு இந்திராகாந்தி சமாதான விருது பொருத்தமானதே.

**யோ.நிமல்ராஜ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பார்த்து ஏமாந்த மக்கள்

இலங்கையின் இரண்டு ஜனாதிபதிகள் தமது பதவிக் காலத்தில் கால்பதிக்க முடியாமற்போன யாழ்.குடாநாட்டிற்கு நாட்டின் நிறைவேற்று அதிகாரமுடைய ஐந்தாவது ஜனாதிபதியாகிய மகிந்த ராஜபக்ஷ கடந்த ஞாயிற்றுக்கிழமை வருகை தந்திருந்தார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன,ரணசிங்க பிரேமதாஸ ஆகியோருக்குப் பின்னர் நாட்டின் ஜனாதிபதிகளாக இருந்த டி.பி.விஜயதுங்க மற்றும் சந்திரிகா குமாரதுங்க ஆகியோர் தமது பதவிக் காலத்தில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவில்லை. வட பகுதியில் தீவிரம் பெற்றிருந்த யுத்தமே இவர்களின் வருகையைத் தடுத்த பிரதான காரணியாகும். தற்போது யுத்தம் முடிவடைந்த நிலையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ்.வந்துள்ளார்.

'வருவார், தருவார்' என்று எதிர்பார்த்திருந்த மக்கள் அவர் வந்ததும் ஒருவகையில் சந்தோசமடைந்து,



சென்ற பின்னர் ஏமாற்றமடைந்தனர்.

'நான் உங்கள் தோழன்,நான் உங்கள் சகோதரன், நான் உங்கள் சொந்தக்காரன்' என்று கூறிய ஜனாதிபதி, யாழ்ப்பாண மக்களுக்கு எந்த உறுதிமொழிகளையுமே கொடுக்காமல் சென்றது அவர்களை ஏமாற்றத்திற்குள்ளாக்கியது.

குறிப்பாக யாழ்.குடாநாட்டு மக்களுக்கு இருக்கின்ற மிக முக்கியமான பிரச்சினை உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பானதாகும். வலி.வடக்கில் பரந்தளவிலான பிரதேசமும் வலி.மேற்கு, வலி.தென்மேற்கு,அரியாலை கிழக்கு மற்றும் வடமராட்சி கிழக்கு போன்ற பகுதிகளில் கணிசமான அளவு உயர்பாதுகாப்பு வலயங்களாக இருக்கின்றன. இந்தப் பகுதிகளிலிருந்து வெளியேறிய சுமார் ஒரு இலட்சம் வரையான மக்கள் யாழ்.குடாநாட்டின் பல பாகங்களிலும் சீரழிந்த வாழ்க்கை நடத்துகின்றனர்.

யாழ்.மாவட்டத்தின் பொருளாதார வளத்தைப் பொறுத்தவரையில் மேற்கூறப்பட்ட பகுதிகளே சிறந்த விவசாய மற்றும் கடற்றொழில் வளம்மிக்க பிரதேசங்களாக விளங்குகின்றன. இங்குள்ள மக்கள் தங்களை மீளக்குடியேற அனுமதிக்குமாறே தொடர்ந்தும் கோரி வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த டிசம்பர் மாதம் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த பசில் ராஜபக்ஷ எம்.பி. 'ஜனாதிபதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகின்றபோது உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றுவது மற்றும் அங்குள்ள மக்களை மீள்குடியேற்றுவது தொடர்பான பிரச்சினைகளுக்கு உறுதியான தீர்வை முன் வைப்பார்' என்று தெரிவித்திருந்தார். இதனாலேயே ஜனாதிபதி யாழ்ப்பாணம் வருகை தந்தபோது அவர் உரையாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். ஆனால், அங்கு உரையாற்றிய ஜனாதிபதி 'உயர் பாதுகாப்பு வலயங்கள்' தொடர்பாக எந்தவிதக் கருத்தையும் தெரிவிக்காமையானது அந்த மக்களை ஏமாற்றத்திற்குள்ளாக்கியது.

மேலும், ஜனாதிபதியைச் சந்தித்து தமது பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கென்று யாழ்ப்பாணத்திலுள்ள சில சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆயத்தமாக இருந்தனர். குறிப்பாக வலி.வடக்கு மீளக் குடியமர்வோர் புனர்வாழ்வுக் குழு,யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம், ஆசிரிய உதவியாளர்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட மற்றும் பல குழுவினர் அவரைச் சந்திக்கவிருந்தனர். ஆனால், அவர்களில் யாரையுமே ஜனாதிபதி மகிந்த சந்திக்கவில்லை.

ஜனாதிபதியின் யாழ்.வருகையானது திடீர் வருகையாக அமையவில்லை. குறிப்பாக ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிக்கப்பட முன்னரே அவர் யாழ்ப்பாணத்திற்கு வருகைதரவுள்ளார் என்ற செய்தி பரவியது. திட்டமிட்ட ரீதியிலேயே இந்த விஜயம் அமைந்த போதிலும் மேற்படி குழுக்களைச் சந்திக்காமல் சென்றமையானது மக்களை மேலும் ஏமாற்றத்திற்குள்ளாக்கியது.

மேலும், ஜனாதிபதி மகிந்த யாழ்.ஆரியகுளம் நாகவிகாரையில் வழிபாட்டை முடித்துக்கொண்டு வெளியேறியபோது நடைபெற்ற சம்பவமொன்றும் இங்கே கவனயீர்ப்பைப் பெறுகின்றது. ஆரியகுளம் நாகவிகாரைக்குப் பின்பக்கமாகவுள்ள உயர்கலைக் கல்லூரி மாணவர்களிடம் சென்ற ஜனாதிபதி தனக்கு வாக்களிக்குமாறு கூறிவிட்டுச் சென்றபோது 'நாங்கள் வாக்குப்போட மாட்டோம்' என்று அங்கு நின்ற மாணவர்கள் உரத்துக் கத்தியிருக்கின்றனர்.

பாடசாலை மாணவர்கள் இவ்வாறு கத்தியிருந்தால் அது வேறு விடயம். ஆனால் பட்டப் படிப்பை மேற்கொள்கின்ற மாணவர் குழாம் அதுவும் ஜனாதிபதியைப் பார்த்து இவ்வாறு கத்தியிருக்கின்றமையானது இங்கே முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது.

தேர்தலுக்கு இன்னும் 10 நாட்களே இருக்கின்ற நிலையில் இரண்டு பிரதான வேட்பாளர்களின் செயற்பாடுகளும் ஒரு புறம் சிரிப்பையும் மறுபுறம் சிந்திப்பையும் ஏற்படுத்துகின்றன.

அதாவது மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்தவர். விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இவர் திறமையாகச் செயற்பட்டமையைத் தொடர்ந்து ஜனாதிபதி மகிந்த இவருக்கு சேவை நீடிப்பை வழங்கினார். இவரின் தலைமையின் கீழே இராணுவம் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்திருக்கிறது.

மகிந்த ஜனாதிபதியாகப் பதவியேற்றது முதல் ஈழ யுத்தம் முடிவடையும் வரை அவர் சொன்னதையே பொன்சேகா வட பகுதியில் செய்துகொண்டிருந்தார். ஆனால் தற்போது நடைமுறை தலை கீழாக மாறியிருக்கின்றது. பொன்சேகா சொல்வதையே மகிந்த ராஜபக்ஷ தற்போது வட பகுதியில் செய்துகொண்டிருக்கிறார்.

அதாவது தான் ஆட்சிக்கு வந்ததும் ஏ-9 நெடுஞ்சாலையூடாக 24 மணிநேரம் போக்குவரத்திற்கு ஏற்பாடு செய்யப்படுமென்று பொன்சேகா கூறினார். அதை மகிந்த செய்து முடித்துவிட்டார். விடுதலைப் புலிகளெனத் தடுத்து வைக்கப்பட்டிருப்போரில் சிறு குற்றத்தின் அடிப்படையில் அவர்கள் படிப்படியாக விடுதலை செய்யப்படுவார்கள் என்றார் பொன்சேகா. குறிப்பிட்டளவான புலிச் சந்தேக நபர்களை மகிந்த ராஜபக்ஷ அண்மையில் விடுவித்திருக்கிறார். உயர் பாதுகாப்பு வலயங்கள் இல்லாமற் செய்யப்பட்டு அங்கு மக்கள் மீள் குடியேற்றப்படுவார்களென்று பொன்சேகா கூறினார். யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த போது ஜனாதிபதி மகிந்த இதனைக் கூறாவிட்டாலும் அமைச்சர் டக்ளஸும் வடமாகாண ஆளுநரும் இணைந்து அதற்கான ஆரம்ப கட்டப் பணிகளில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளே ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிக்கும் என்ற நிலையில் இந்தத் தேர்தலில் நெருப்பு எடுத்துக் கொடுத்தவரை வெற்றிபெற வைப்பதா? வீட்டை எரித்த வரை வெற்றிபெற வைப்பதா? என்பதை தமிழ் மக்களே தீர்மானிக்க வேண்டும்.

**என்.பிருந்தாபன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 வயதில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அனுமதி



கணித பாடத்தில் திறமை சாலியான 14 வயதான பிரிட்டிஷ் மாணவனுக்கு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் பிற்ஸ் வில்லியம் கல்லூரியில் அனுமதி கிடைத்திருக்கிறது.

சுறே பகுதியைச் சேர்ந்த அரன் பெர்னாண்டஸ் என்ற மாணவனே 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பிரிட்டனின் பிரதமராக பதவிவகித்த வில்லியம் பிற்றுக்குப் பிறகு மிக இளைய வயதில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் அனுமதி பெறுகின்ற முதல் மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழகத்தினால் கடந்த கோடை காலத்தில் நடத்தப்பட்ட பரீட்சையில் அரன் சித்தியடைந்ததையடுத்து அவருக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக தந்தையார் கலாநிதி நீல் பெர்னாண்டஸ் தெரிவித்திருக்கிறார்.

பிற்ஸ்வில்லியம் கல்லூரியில் அரனுக்கு கல்வி கற்பிக்கப்போகும் பேராசிரியர் டேவிட் கார்ட்வெல் இவ்வருடம் அக்டோபரில் அரனை வரவேற்க பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்திருக்கிறது என்று குறிப்பிட்டார். மாணவர்களின் பின்னணியைப் பற்றிப் பாராமல் சகல மாணவர்களினதும் விண்ணப்பங்களைப் பரிசீலிப்பதைப் போன்றே அரனின் விண்ணப்பத்தையும் தாங்கள் பரிசீலித்ததாகவும் பேராசிரியர் கார்ட்வெல் தெரிவித்தார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் காலத்தில் தனது முழுமையான கல்வித்துறை ஆற்றலையும் வெளிக்காட்டக் கூடியதாக அரன் தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கோரப்பட்டிருக்கிறது.



வீட்டில் இருந்தே கல்வி கற்ற அரனின் மிகுந்த விருப்புக்குரியபாடம் கணிதமாகும். உயர்தரப் பரீட்சையில் கணிதத்தில் 'ஏ' சித்திபெற்றிருக்கும் அரன் பௌதிகவியல் பாடத்திலும் 'ஏ' சித்தியைப் பெறவேண்டுமென்ற நிபந்தனையுடனேயே அவருக்கு பல்கலைக்கழக அனுமதியை வழங்கியிருக்கிறது. ஒரு கணிதவியல் ஆராய்ச்சியாளராக வரவேண்டுமென்பதே தனது இலட்சியம் என்று இந்த இளவயது மாணவன் கூறுகிறான்.

## 237 வருடங்களுக்குப் பிறகு சாதனை

237 வருடங்களுக்கு முன்னாள் 14 வயதில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் பெம்புருக் ஹோலில் அனுமதிபெற்ற வில்லியம் பிற் இருதடவைகள் பிரிட்டனின் பிரதமராக இருந்தவர். இவரது தந்தையாரும் பிரதமராகப் பதவிவகித்தவர். தந்தையார் William pitt the Elder என்றும் William pitt the younger என்றும் அழைக்கப்பட்டனர்.

பிரபல்யம் வாய்ந்த ட்ரவல்கார் யுத்தத்தின்போது மகன் வில்லியம் பிற் பிரதமராகப் பதவிவகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மிகவும் இளவயதில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் அனுமதிபெற்றதைப் போன்றே மிகவும் இளவயதிலேயே [24 வயது] பிரதமராகவும் பதவியேற்ற பெருமைக்குரியவர் வில்லியம் பிற். அவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் 1773 ஆம் ஆண்டு சேர்ந்தார். 1759 மே 28 இல் பிறந்த அவர் 1783 ஆம் ஆண்டு முதற் தடவையாக பிரதமர் பதவியேற்றார். அந்தக் காலகட்டத்தில் அரசாங்கத் தலைவர் பிரதமர் (prime minister) என்று அழைக்கப்படவில்லை. ஆனால், பதவியின் அந்தஸ்து பிரதமருக்குரியதே.

வில்லியம் பிற் நிதியமைச்சராகவும் ஒருதடவை பதவிவகித்தார். 1804 ஆம் ஆண்டில் மீண்டும் பிரதமரான அவர் 1806 இல் மரணமடைந்தார்.

இரண்டே கால் நூற்றாண்டுகளுக்கும் அதிகமான காலத்துக்குப் பிறகு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் மிகவும் இளவயதில் அனுமதி பெறுவதில் வில்லியம் பிற்றைப் போன்று அரன் பெர்னாண்டஸ் சாதனை படைத்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் அடுத்த பெரிய பணக்காரர் எந்த நாட்டவர்?



உலக அரங்கில் சீனாவினதும் இந்தியாவினதும் பொருளாதாரங்கள் வேகமாக முன்னேற்றம் கண்டுவருவதால் 'அடுத்த பில் கேற்ஸ்' இந்த இரு நாடுகளில் ஏதாவது ஒன்றிலிருந்தே தோன்றக்கூடும் என்று பெரும்பாலான அமெரிக்கர்கள் நம்புவதாக ஆய்வொன்றின் மூலம் கண்டறியப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவின் லாஸ் வெகாஸில் நடைபெற்று வரும் உலகின் மிகப்பெரிய பாவனையாளர் தொழில்நுட்ப கண்காட்சியின் போது Zogby International என்ற அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின் முடிவுகள் இவ்வாரம் Consumer Electronics Associaton நிறுவனத்தினால் வெளியிடப்பட்டிருக்கின்றன.

அடுத்த பில் கேற்ஸ் [உலகின் மிகப் பெரிய பணக்காரன்] எந்த நாட்டவராக இருப்பார் என்று கேட்கப்பட்ட போது 40 சதவீதமான அமெரிக்கர்கள் 'இந்தியாவில் அல்லது சீனாவிலிருந்து' என்று பதிலளித்திருக்கிறார்கள்.

உலகில் பொருளாதார தலைமை நாடாக அமெரிக்கா எதிர்காலத்திலும் தொடர்ந்து விளங்க வேண்டுமானால் புத்தாக்க முயற்சிகள் அவசியமானது என்று அதிகப் பெரும்பான்மையான அதாவது 96 சதவீதமான அமெரிக்கர்கள் நம்புகிறார்கள். ஆனால், தற்போதைய நிதிப்பற்றாக்குறை [வரவை மிஞ்சிய செலவு] மேலும் அதிகரிக்குமேயானால் தங்களது எதிர்காலச் சந்ததிகளின் சுபிட்சம் பாதிக்கப்படுமென்று அவர்கள் கவலைகொண்டுள்ளார்கள் என்று ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வேலைவாய்ப்பை போதுமான அளவில் எதிர்காலத்தில் வழங்குவதற்கும் பொருளாதார வெற்றிக்கும் புத்தாக்க முயற்சிகள் அவசியம் என்று நம்பும் அமெரிக்கர்கள் தற்போதைய தொழில்வாய்ப்புகள் இழக்கப்படாமல் இருப்பதற்கும் புத்தாக்க முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்று கருதுகிறார்கள்.

உலகளாவிய பொருளாதார போட்டி தரவரிசையில் அமெரிக்கா அதன் இடத்தை இழந்துவிட்ட அதேவேளை இந்தியா, சீனா மற்றும் பிரேசில் தொடர்ந்தும் மேம்பட்டு வருவதாக World Econamic Forum அறிவித்திருப்பதையடுத்து அடுத்த வருடம் அமெரிக்கா அதன் அந்தஸ்தை மீளப்பெறுவது சாத்தியமில்லை என்று 74 சதவீதமான அமெரிக்கர்கள் கூறியிருக்கிறார்கள்.

Zogby International அமைப்பினால் கடந்த நவம்பர் 20–23 இல் நடத்தப்பட்ட இந்த ஆய்வுக்கு 18 வயதுக்கு மேற்பட்ட 3770 அமெரிக்கர்கள் பயன்படுத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# பெண்களை இளமையாக காட்ட உதவும் உதட்டு அழகு

**ஹொ**லிவூட்டின் பிரபல கவர்ச்சி நடிகை அன்ஜெலீனா ஜொலியை தடித்த உதடுகளைக் கொண்ட பெண்கள் தங்கள் வயதுக்கு ஏற்ற உண்மையான தோற்றத்தை விடவும் மிகவும் இளமையாகக் காட்சியளிப்பார்கள் என்று ஆராய்ச்சி ஒன்றின் மூலம் கண்டறியப்பட்டிருக்கிறது.


அன்ஜெலீனா ஜொலீயன் உதடுகள் உலகின் மிகவும் விருப்பத்துக்குரியவை என்று அபிப்பிராய வாக்கெடுப்புகள் கூறுகின்றன. அந்த அழகிய நடிகையைப் போன்று வனப்பான உதடுகளைக் கொண்டிருக்க பெரும்பாலான பெண்கள் விரும்புகிறார்கள். பெண்களுக்கு முகத்திலும் உடலிலும் சுருக்கங்கள் ஏற்பட்டு அவர்களின் கூந்தலும் பளபளப்புக் குறைந்து நரைதட்டத் தொடங்கினாலும் கூட முழுமையான உதடுகள் அவர்களை அழகானவர்களாகக் காட்ட பெரிதும் உதவும் என்பது ஆராய்ச்சியாளர்களின் அபிப்பிராயமாக இருக்கிறது.

உதடுகள் சுருங்குவதற்கு அல்லது கெட்டியானவையாக மாறுவதற்கு சூரிய ஒளிபடுகை போன்ற வெளிப்புறக் காரணிகள் அல்ல. மரபணுக்களே காரணமாக இருக்கிறது என்று நிபுணர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.

முழுமையான உதட்டுப் பிதுக்கம் (Full pout) பாலியல் கவர்ச்சியின் முக்கியமான அறிகுறி என்பது உலகின் 7 பல்கலைக்கழகங்களினால் மேற்கொள்ளப்பட்ட யூனிலீவர் ஆய்வில் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. 30–40 வயதுக்கு இடைப்பட்ட காலத்திலேயே உதடுகள் சுருங்க ஆரம்பிக்கின்றன.

உதட்டுக் கவர்ச்சி தொடர்பான மேற்படி ஆய்வின் முடிவுகள் இவ்வாரம் லண்டன் டெயிலி எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வெளியாகியிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நீரிழிவு நோயினை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க நாம் செய்யவேண்டியவை...

நீரிழிவு நோயானது உலகம் முழுவதும் மிகவும் விரைவாக அதிகரித்து வருகின்றது. சலரோகத்திற்கான சர்வதேச அமைப்பு (IDF) தற்போது 100 மில்லியன் மக்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு உள்ளதாக கணித்துள்ளது. இது வளர்ந்தவர்களின் சனத்தொகையில் 6% ஆகும். இத்தொகையானது 2030 ஆம் ஆண்டளவில் 300 மில்லியனை எட்டுமெனக் கணிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் செய்யப்பட்ட ஆய்வுகளின் படி இலங்கையிலும் இவ்வதிகரிப்பு காணப்படுகின்றது. அண்மைய ஆய்வின் படி 11.8% மானவர்கள் சலரோக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அறியவந்துள்ளது. இவ்வீதமானது இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை 17.4% ஆகக் காணப்படுகின்றது. வடக்கு, கிழக்கு மாகாணத்தில் எவ்வித மான ஆய்வும் (Prevalence Study) இதுவரை செய்யப்படவில்லை.

நாம் எல்லோரும் அறிந்துள்ளதுபோல் சலரோகம் ஒருமுறை வந்தால் அதனை குணப்படுத்த முடியாது. ஆனால், அதனைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும். அவ்வாறு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதன் மூலம் எதிர் காலத்தில் வரும் ஏனைய பாரதூரமான சிக்கல்களை (Complications) தவிர்க்க முடியும். உதாரணமாக சிறுநீரகப்பாதிப்பு, இதயப்பாதிப்பு, கண்களில் ஏற்படும் பாதிப்பு, கால்களில் ஏற்படும் புண்கள் போன்ற பல சிக்கல்களைத் தவிர்க்க முடியும். ஆகவே எவ்வாறு நீரிழிவு நோயினைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கலாம் என இனிநோக்குவோம்.

நீரிழிவைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கும் எதிர்காலத்தில் வரும் சிக்கல்களைத் தவிர்ப்பதற்குமான அடைய வேண்டிய இலக்குகள் (Targets)

. குருதியில் வெல்லத்தின் அளவு

. வெல்லமேற்பட்ட ஈமோகுளோபின் அளவு (HbA1C) 6.5% விடக்குறைவாக இருக்க வேண்டும்.

b. Fasting Bloodsugar (FBS) - (அதிகாலையில் 8 மணிநேரம் உணவு தவிர்த்த பின் எடுக்கப்படும் குருதி) (110 mg/dl ஐ விடக்குறைவாக இருக்க வேண்டும்)

1. உணவு எடுத்து 2 மணிநேரத்தின் பின் எடுக்கும் குருதியின் அளவு (PPBS)-140mg/dl ஐ விடக்குறைவாக இருக்க வேண்டும்.

2. குருதியமுக்கத்தினளவு (Blood presure)

130/90 ஐ விடக் குறைவாக இருக்கவேண்டும். சிறுநீரில் புரதம் வெளியேறுபவர்களில் 125/75 ஐ விடக்குறைவாக இருக்கவேண்டும்.

3. குருதியில் உள்ள வேறு வகையான கொழுப்புப் பொருட்களின் அளவு

LDL<100mg/dl,
TG <150 mg/dl
Total <160mg/dl ஐ விடக் குறைவாக இருக்க வேண்டும்.

உடல் பருமன் (உடல்திணிவுக் கட்சி BMI) BMI-21-23kg/m2

மேற்கூறிய இலக்குகளை அடைவதற்குப் பின்வருவன வற்றை நோயாளிகள் கடைப் பிடிக்க வேண்டும்.

இடுப்புச் சுற்றளவு (waist Circumference) ஆண் 90 cm, பெண் 80 cm

4. கிரமமான உடற்பயிற்சி

உதாரணமாக ஒரு நாளைக்கு 30 நிமிடம் படி ஒருகிழமையில் 150 நிமிடம் விரைவாக நடத்தல்.

5. கிரமமாக குருதிவெல்ல அளவைச் சோதிக்க வேண்டும். குளுக்கோமீற்றர் இதற்காகப் பாவிக்கலாம்.

6. புகைப்பிடிக்கும் பழக்கத்தை நிப்பாட்டவேண்டும்.

7. பாதங்களை சுத்தமாக வைத்திருப்பதுடன் பாதணிகளைப் பாவிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

8. மன அழுத்தத்தைக் குறைப்பதற்கான உரிய வழிமுறைகளை மேற்கொள்ள (உதாரணமாக தியானம்)

9. Aspirin 75mg day 30 வயதுக்கு மேல் வைத்தியரின் ஆலோசனைப்படி பாவிக்கலாம். இவ்வாறு பாவிப்பது Shroke (பாசிசவாதம்) இருதய வருத்தம் போன்றவற்றில் இருந்து பாதுகாப்பு அளிக்கும்.

10. உணவில் உப்புச் சேர்ப்பதைக் குறைத்துக்கொள்வதுடன், மதுபானம் பாவிப்பதை வரையறுத்துக்கொள்ளவும் (limit)

சிகிச்சை நிலையங்களில் செய்ய வேண்டிய பரிசோதனைகள்.

1.) குருதியமுக்கம், நிறை, உயரம் (BMI), பாதப்பரிசோதனை ஒவ்வொரு முறையும் செய்யப்படலாம்.

2.) கண்பரிசோதனை வருடம்தோறும் செய்ய வேண்டும்.

3.) HbA1C குளுக்கோசு ஏற்றப்பட்ட ஈமோகுளோபின் 3 மாதங்களுக்கு ஒருமுறை.

4.) lipidprofile (குருதியில் கொழுப்பின் அளவு) -6 மாதங்களுக்கு ஒருமுறை

5. Transaminase (நொதிய அளவு) வருடந்தோறும்.

6. யூரியா , மூலக அளவு (elechrolyte)- ஆண்டுக்கொருமுறை நோயாளி குருதியமுக்கத்திற்கு மருந்து எடுக்கும் (ACEI) சந்தர்ப்பங்களில்.

7. குருதியில் Creatinine அளவு வருடம் ஒருமுறை (சாதாரணமாக இருக்குமாயின்)

8. சிறுநீரில் புரத அளவு (Micro albumin)- ஆண்டுக்கு ஒருமுறை (சாதாரணமாக இருக்குமாயின்)

**டாக்டர் ந.ராஜேஷ்கண்ணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்களின் கவனத்துக்கு...

வாரத்தில் இருதடவை கள் உடலுறவு கொள்வது ஆண்களின் இருதய நோய் களுக்கான ஆபத்தைக் குறைக்குமென்று புதிய ஆராய்ச்சியொன்றின் மூலம் தெரியவந்திருக்கிறது.


கிரமமாக உடலுறவு கொள்ளும் ஆண்கள் மாதம் ஒருதடவை அல்லது அதற் கும் குறைவான உடல்உ றவு கொள்ளும் ஆண்களை விடவும் உயிராபத்தான இருதய நோய்களினால் பாதிக்கப்படக் கூடிய ஆபத்தை 45 சதவீதம் குறை வாகவே கொண்டிருக்கிறார் கள் என்று ஆய்வில் கண்ட றியப்பட்டிருக்கிறது.

1000 க்கும் அதிகமான ஆண்களைப் பயன்ப டுத்தி அமெரிக்க மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் இந்த ஆய்வைச் செய்திருக்கி றார்கள். அதன் முடிவுகள் *'American journal of cardiology'* சஞ்சிகையில் இவ்வாரம் வெளியிடப்பட் டிருக்கின்றது.

உடலுறவு ஆண்களின் இருதயத்தில் நோய்களுக்கு எதிரான பாதுகாப்பைத் தரு கிற விளைவை ஏற்படுத்து கிறது. இதன் மூலம் பெண் களும் பயனடைகிறார்களா இல்லையா என்பதை ஆராய்ச்சியாளர்கள் ஆய் வுக்குட்படுத்தவில்லை.

ஆண்களுக்கு இருக்கக் கூடிய இருதய நோய் குறித்து பரிசோதிக்கும் டாக் டர்கள் அந்த ஆண்களின் பாலியல் உறவு செயற்பா டுகளைப் பற்றி விசாரிக்க வேண்டியது அவசியமாகும் என்று ஆராய்ச்சியாளர்கள் வலியுறுத்தியி ருக்கிறார்கள் என்று லண்டன் டெலிகிராவ் பத்தி ரிகை இவ்வாரம் செய்தி வெளி யிட்டிருக்கிறது.

உடலுறவு உடல் மற்றும் உள ஆரோக்கி யத்துக்கு நல்லது என்று பரவலா கக் கருதப்படு கின்ற போதிலும் இருதயநோய் போன்ற பாரதூ ரமான நோய்கள் மீது உடலுறவு செலுத்துகின்ற தாக்கம் தொடர் பில் விஞ்ஞான ரீதியாக இது வரை நிரூபிக் கப்படவில்லை என்பது குறிப்பி டத்தக்கது.



அமெரிக்கா வின் மசாசூசெ ட்ஸ் மாநிலத் தில் உள்ள நியூ இங்கிலாந்து ஆராய்ச்சி நிறுவ னத்தைச்சேர்ந்த விஞ்ஞானிகளே இந்த ஆய்வை மேற்கொண் டனர். *Massachusetts Mals Ageing Study* என்று பெயரிடப்பட்ட இந்த ஆய்வு 1987 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 40 வயது தொடக்கம் 70 வயதுவரையான ஆண்க ளின் பாலியல் நடவடிக்கை கள் பற்றி பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது.

16 வருடங்களாக உடலு றவு செயற்பாடுகள் குறித்து ஒவ்வொரு ஆணிடமும் கிரம மாகக் கேட்டறியப்பட்டது. பின்னர் அந்த ஆண்களில் இருதய நோய்க்கான அறி குறிகள் இருக்கின்றனவா என்று பரிசோதிக்கப்பட் டது. ஆய்வுக்குட்படுத்தப் பட்ட ஆண்களின் வயது, எடை, இரத்த அழுத்தம் மற்றும் கொலஸ்ரோல் மட்டங்கள் ஆகியவையும் கணக்கிலெடுக்கப்பட்டன.


## பெண்களும் வாசிக்கலாம்

ஒருவாரத்தில் குறைந்த பட்சம் இரு தடவைகள் உட லுறவு கொண்ட ஆண்கள் மாதமொருதடவை அல்லது அதற்கு குறைவான உடலு றவு கொண்ட ஆண்களைவி டவும் இருதய நோய் ஆபத் தைக் குறைவாகவே கொண்டிருந்தார்கள் என்பதை ஆய்வின் முடிவுகள் வெளிக்காட் டின.

பௌதீக ரீதியாகவும் உணர்ச்சி பூர்வமாக வும் உடலில் ஏற்படு கின்ற தாக்கங்களின் காரணமானவை உட லுறவின் மேற்கண்ட பயன்கள் இருக்கக் கூடும் என்று முடிவு களை ஆராய்ந்த பின் னர் விஞ்ஞானிகள் அபிப்பிராயம் வெளி யிட்டனர்.

அடிக்கடி பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதில் நாட்டம் கொண்ட ஆண்களும் அவ்வாறு அடிக்கடி அச்செயற்பாடுகளில் ஈடுபடக் கூடிய நிலை யில் இருப்பவர்களும் ஆரோக்கியமானவர் களாக இருப்பது சாத் தியம். ஆனால், சில வடிவிலான பாலியல் உறவுகள் இருதயத் தின் ஆரோக்கியத் தைப் பாதுகாப்பதில் நேரடியாக உதவக் கூடிய உடற் செயற் பாடுகளாகவும் அமை கின்றன. அத்துடன் அடிக்கடி உடலுறவு கொள்ளும் ஆண்கள் தங்களது துணைவி யருடன் கூடுதலான அளவுக்கு நெருக்க மான ஆதரவு உறவு முறையை வளர்த்துக் கொள்ளவும் கூடும். மனச்சோர்வை அகற் றுவதன் மூலமாக இது உட லாரோக்கியத்தை மேம்ப டுத்துகிறது என்றும் ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குடாநாட்டில் வலுவிழந்துள்ள சுகாதாரத்துறை

யாழ். குடாநாட்டில் தற்போது டெங்குக் காய்ச்சல் உள்ளிட்ட பல்வேறு நோய்கள் மிகவேகமாகப் பரவிவரும் நிலையில் அதனால் பாதிக்கப்படுவோரை பராமரிக்க முடியாத அவல நிலையில் குடாநாட்டு வைத்தியசாலைகளும் சுகாதாரத்துறையினரும் மிகுந்த சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

குடாநாட்டு மக்கள் தொகைக்கேற்ற வகையில் வைத்தியசாலைகள் இல்லாமையும் இருக்கின்ற வைத்திய சாலைகளில் காணப்படும் மருத்துவர் வெற்றிடங்கள், மருந்துப் பற்றாக்குறைகள், ஆள்ணி, தளபாட, கட்டிடவசதிகள் போதாமை போன்ற பல்வேறு பிரச்சினைகளினால் குடாநாட்டில் சுகாதாரத்துறை வலுவிழந்து போயுள்ளது.

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ், அரசு வடமாகாண வைத்தியசாலைகளின் அபிவிருத்திப் பணிகளுக்கு 460 மில்லியன் ரூபா நிதியினை கடந்தாண்டு ஒதுக்கியுள்ள போதிலும், அவை சரியான முறையில் இதுவரை நிறைவேற்றப்படாமையினால் இங்கு வரும் நோயாளர்கள் போதிய வளமின்றி சிரமப்படுகின்றனர்.

நாளொன்றுக்கு கூடியளவு நோயாளர்களை உள்ளெடுக்கும் வடமாகாண வைத்திய சாலைகளை தென்பகுதி வைத்தியசாலைகளுடன் ஒப்பிடுகையில் அபிவிருத்திப் பணிகள், வைத்தியர் பற்றாக்குறை, போதிய மருத்துவ வசதியில்லாமை போன்ற விடயங்களில் வடமாகாண வைத்திய சாலைகள் முன்னிலையில் இருக்கின்றன.

மேலும் யாழ்.வைத்திய சாலைகளில் வைத்தியரின் பற்றாக்குறை நிலவும் போது நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுவதுடன் இவர்களால் குறிப்பிட்ட காலத்தில் நோயாளர்களுக்கான உரிய சிகிச்சை பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இங்கு வைத்தியர் பற்றாக்குறை நிலவ யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலிருந்து வெளியேறும் வைத்தியர்கள் தமது பிரதேசத்தில் வைத்தியத்துறையை மேற்கொள்ள முன்வராமையே காரணமாகவுள்ளது. ஏனெனில், வடக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசத்தில் தொழிலை மேற்கொள்ளும் அதேவேளை, மேலதிக அறிவை பெற்றுக் கொள்வது இலகுவாக அமைந்துள்ளது. அத்துடன், மருத்துவக் கல்வியை முடித்துக் கொண்டபின், மேலதிக கல்விக்காக வெளிநாடு செல்கின்றமையினாலும், இப்பகுதி வைத்தியசாலைகளில் மருத்துவர் வெற்றிடம் நிலவுகிறது.

யுத்தத்தினால் உள்நாட்டில் இடம்பெயர்ந்து, முகாம்களில் வாழ்ந்து வந்த மக்கள் மீள் குடியேற்றம் என்ற பெயரில் வீடமைப்பிற்கான வசதியின்றி சொந்த.இடங்களுக்கு அனுப்பப்படுவதால் இவர்களின் வாழ்க்கைத்தரம் மோசமடைந்துள்ளது.

முகாம்களில் இருந்தவர்களுக்கான ஒழுங்கான உணவு விநியோகம் இன்மையால் சுகாதாரச் சீர்கேடுகளுக்கு ஆளாகியுள்ளதுடன் போஷாக்கு குறைபாட்டால் பெரிதும் பாதிக்கப்பட்ட நோயாளர்களின் தொகை அதிகரித்துள்ளதனாலும், பல்வேறுபட்ட உளவியல் சம்பந்தமான நோய்களாலும் முகாம் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்ததால் இவ்வாறான நோய்களுக்கு சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையாலும் வைத்தியசாலைகளில் இடப்பற்றாக்குறை நிலவுகிறது.



அத்துடன் நிலவும் கால நிலை மாற்றத்தினால், காய்ச்சல், தொற்று நோய்களினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தற்போது குடாநாட்டை கலக்கிவரும் டெங்குக் காய்ச்சல் போன்றவற்றால் அதிகளவிலானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். வைத்தியசாலைகளில் நோயாளிகள் நிரம்பிக் காணப்படுவதால் நடை பாதைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த சிலவாரங்களாக யாழ்ப்பாணத்தில் பெய்த கடும் மழைக்குப் பின்னர் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தினால் டெங்குக் காய்ச்சல் உட்பட பல்வேறு நோய்கள் பரவிவருகின்றது. அத்துடன் காய்ச்சல் சிகிச்சைபெறவருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால் யாழ்.வைத்தியசாலையின் 1 ஆம், 2 ஆம், 7 ஆம், 10 ஆம் இலக்க விடுதிகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

எது எவ்வாறிருப்பினும், அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த சுகாதார அமைச்சர், 24 மில்லியன் ரூபா செலவில் நோயாளர் விடுதி, சிகிச்சைப் பிரிவுகள் அமைத்துத் தருவதாக கூறியதுடன், யாழ். வைத்தியசாலையில் கதிர் வீச்சு (X-Ray) பிரிவொன்றையும் திறந்து வைத்திருந்தும் இவ்வேலைத்திட்டங்கள் இன்னும் துரித கதியில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வைத்தியசாலைகளையும், வடபகுதியின் பிரதான வைத்தியசாலையாகக் காணப்படும் யாழ்.வைத்திய சாலையில் நிலவும் பற்றாக் குறைகளை அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் மேம்படுத்துவது அரசின் தலையாய கடமையாகும்.



எச். ஹுஸ்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வாழை' மரமல்ல

வாழைப்பழங்கள் காய்க்கும் வாழை மரங்கள் உண்மையில் மரங்கள் இல்லை. அதாவது வாழை மரம் என்று நாம் கூறுவது தவறு. அது ஒரு தாவரம். எனெனில், மரங்களில் உள்ளதுபோல் கடினமான தண்டுப் பகுதியோ , கிளை களோ இருப்பதில்லை.

இது தாவரங்களைப் போல பூத்துக் காய்த்தபின் இறந்துவிடுகின்றன.

எனவே, உலகிலேயே பெரிய தாவரம் வாழை மரம் என்று கூறப்படுகின்றது.

வாழை அதன் வகையில் தாவரம் என்றாலும் அது மரம் என்றுதானே அறிமுக மானது. எனவே அவ்வாறே இதில் கூறுவோம். வெப்பம் மிகுந்த ஈரமான காலநிலை களில் வாழை மரங்கள் நன் றாக வளர்கின்றன. இதற் கான நிலப்பகுதியில் நல்ல நீர்ப்பாசன வசதி இருக்க வேண்டும்.

வாழை ஆசியாவில் தோன்றியது என்றாலும் அது மற்ற வெப்ப மண்டலக் கண்டங்களான ஆபிரிக்கா, தென்னாபிரிக்கா போன்ற வற்றுக்குப் பரவியது.

வாழைப்பழம் விளைவிப் பதில் உலகிலேயே உச்சத் தில் நிற்பது இந்தியாதான். இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 170 இலட்சம் தொன் வாழைப்பழம் உற்பத்தி செய்யப்படுகிறது.

வாழையின் மற்றொரு சிறப்பு என்ன வென்றால் வாழை மரத்தின் அனைத்து பாகங்களும் மக்களுக்குப் பயன்படுகி றது. பூ, இலை,காய், கனி, தண்டு,நார்ப் பகுதி என்ற எதுவும் வீணாகாது.

மேலும், வாழைப்பழக் கழிவுகள் காகிதமாக மாற்றப்படுகின்றன. வாழை, வாழை இலைகளைக் கொண்டு பட்டுப் போன்ற மென்மையான துணிகள் நெய் யப்படுகின்றன. ஜப்பானில் பாரம்பரிய கிமானோ ஆடைகளை உருவாக்க வும் நேபாளத்தில் கம்பளம் தயாரிக்க வும் இலைகள் பயன்படுத்தப்படுகின் றன.






## சமாதானப் புறா



சமாதானத்திற்கும் அமைதிக்கும் வெள்ளைப் புறாவை சின்னமாகக் கூறுவார்கள்.

3,000 அடி உயரத்திலும் புறா தன் இருப்பிடத்தை அறிந்துகொள்ளும். புறாக்களில் 130 இனங்கள் உள்ளன. போலந்து நாடு புறா வளர்ப்புக்கு புகழ் பெற்றது.

புறாவை தெய்வீகப் பறவையாக எகிப்தியர்கள் எண்ணினார்கள்.

புறாக்களுக்கு ஞாபகசக்தி அதிகம்.

## குறுக்கெழுத்துப்போட்டி - 16

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ☯ | 4 | 5 |
| 6 | 7 | ☯ | 8 | 9 | ☯ |
| ☯ | 10 | ☯ | 11 | 12 | 13 |
| ☯ | ☯ | 14 | 15 | ☯ | 16 |
| 17 | 18 | ☯ | 19 | ☯ | 20 |
| 21 | 22 | ☯ | 23 | 24 | ☯ |

**இடமிருந்து வலம்**

1. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சின்னம்
4. இது கொட்டும்
6. இதன் வாலை நிமிர்த்த முடியாது என்பர் (திரும்பியுள்ளது)
8. பிழை என்பதன் எதிர்ச்சொல் (திரும்பியுள்ளது)
11. நஞ்சு என்றும் சொல்லலாம். (குழம்பியுள்ளது)
14. மரம்
17. தமிழ் மாதம்
21. வெயில் காலம் (திரும்பியுள்ளது)
21. மரங்களில் இருப்பது

**மேலிருந்து கீழ்**

1. குழந்தை
2. பழம் தரும் மரமொன்று (குழம்பியுள்ளது)
4. நாடு என்றும் சொல்லலாம்
8. விஜயகாந்த் தற்போது நடித்து வரும் படம் (குழம்பியுள்ளது)
13. ஆர்ப்பாட்டங்களில் இது இருக்கும்
17. ஆள் பாதி இது பாதி என்பர்
18. 100 இலட்சம் சேர்ந்தால் வருவது (தலைகீழ்)

### குறுக்கெழுத்துப்போட்டி - 14 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. வாரம் | 1. வானம் |
| 4. கூனி | 2. தாரம் |
| 6. கனம் | 3. கம்பம் |
| 10. தாபம் | 4. கூதல் |
| 13. பல் | 14. பங்கம் |
| 17. விலை | 17. விதி |
| 19. கதிர் | 18. மலை |
| 22. மதி | 19. மோர் |
| 24. மோகம் | 20. கதி |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**சு.கல்யாணி,**
**தங்கோடை வீதி, வட்டு. தெற்கு,**
**வட்டுக்கோட்டை.**

### பாராட்டுப்பெறுவோர்

01. ச.கலைறஞ்சன், பத்திரகாளி கோவிலடி, பொலிகண்டி கிழக்கு.

02. கே.அரசேஸ்வரன், கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

03. ரா.உஷாந்தினி, தரம்-6, ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி, புத்தூர்.

04. சி.அன்னலிங்கம், நெல்லியடி வீதி, கல்விளான் - சுழிபுரம்.

05. தி.ஞா.செந்தமிழ்ச்செல்வன், குப்பிளான் தெற்கு, ஏழாலை.

உங்கள் விடைகளை
'Saturday மெயில்'
இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

பெயர் : ......................................................

முகவரி : ......................................................

......................................................

## மரங்கொத்தி பற்றி...



மரங்கொத்தியில் 180 இனங்கள் உள்ளன. மலேசிய மரங்கொத்தி மிகப் பெரியது. இதன் நீளம் 46 செ.மீ. அமெரிக்க மரங்கொத்தி மிகச் சிறியது. இதன் நீளம் 8 செ.மீ. இந்தியாவில் மஞ்சள் நிற மரங்கொத்தி காணப்படுகிறது.

இங்கிலாந்தில் பச்சை நிற மரங்கொத்தி மரத்தைத் துளையிட்டு சாறை உறிஞ்சுகிறது.

## விடுகதை

1. அடர்ந்த காட்டில் ஒற்றையடி பாதை. அது என்ன?
2. பூவுக்குள் பூ வைத்து போர்த்திய பூ. அது என்ன?
3. தச்சன் செய்யாத கதவு, மூடினாலும் திறந்தாலும் சப்தம் வராத கதவு. அது என்ன?
4. முதுகை தொட்டால் மூச்சு விடுவான்; பல்லைத் தொட்டால் பாட்டு பாடுவான். அவன் யார்?
5. பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்துகள். அது என்ன?
6. சிகப்பு பைக்குள் தங்க காசுகள். அது என்ன?
7. அச்சு இல்லாத சக்கரம்; அழகு காட்டும் சக்கரம். அது என்ன?
8. வெளியில் விரியும்; வீட்டில் சுருங்கும். அது என்ன?
9. மரம் உண்டு. இலை இல்லை; கொடி உண்டு, பூ இல்லை. அது என்ன?
10. கிணற்றுக்குள்ளே கிண்ணம் மிதக்குது. அது என்ன?

1. தலைவகிடு
2. வாழைப்பூ
3. கண் இமை
4. ஆர்மோனியம்
5. வெண்டைக்காய்
6. மிளகாய்
7. வானவில்
8. குடை
9. மெழுகுவர்த்தி
10. முழுநிலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய உத்திகள்

இடைமருதூர் கி.மஞ்சுளா

சங்ககாலப் புலவர்கள்,சங்கப் பாடல்களில் அக உணர்வை மறைமுகமாக குறிப்பாக உணர்த்த உள்ளுறை உவமை, இறைச்சி என்னும் இலக்கிய உத்திகளைப் (நயங்களை)பயன்படுத்தி மிகச் சிறப்பாகக் கையாண்டுள்ளனர். இவை இரண்டையும் 'குறிப் புப் பொருள் உத்தி' எனவும் அழைப்பர்.

'வெளிப்படையாகத் தெரியும் பொருளோடு வேறொரு பொருள் புலப்படுவதுபோல அமைப்பது உள்ளுறை உத்தியாகும். உள்ளுறை உத்தியில் உவமையைச் சொன்ன அளவில் உவமிக்கப்படும் பொருள் வெளிப்படையாக இருக்காது. உவமிக்கப்படும் பொருள் தெய்வம் ஒழிந்த கருப்பொருளாக இருத்தல் வேண்டும் என்பது இலக்கணவிதி.

'உள்ளே மறைவாகப் படிந்திருக்கும் குறிப்புப் பொருளை உவமை ஆற்றலால் வெளிப்படுத்துவதால் இதனை உள்ளுறை உவமை என்றனர்.

**'உள்ளுறை உவமைக்கு நாற்கவிராச நம்பி தரும் இலக்கணம் பின்வருமாறு:**

**ஆராய்ந்தறியும் பகுதியினையுடைத்தாய்ப் புள்ளொடும்**
**விலங்கொடும் பிறவொடும்**
**தோன்றும் உள்ளுறை உவமை'**
**(ஒழிபியல்-28)**

அவற்றுள், 'உள்ளுறையுவமம் உயத்துணர் வகைத்தாய்ப் புள்ளொடும் விலங்கொடும் பிறவொடு புலப்படும்' (ஒழி-29) இதற்கு எடுத்துக்காட்டுப் பாடலாக அமைவது,

**'இழை விளையாடும் இளமுலை**
**சாயற்கு இடைந்தமஞ்ஞை**
**கழை விளையாடும் கடிப்புனம்**
**காத்தும் கலையகலாது**
**உழை விளையாடும் உயர்**
**சிலம்பா! இன்னும் உன் பொருட்டால்**
**மழை விளையாடும் மதிற்**
**றஞ்சை வாணம் மலையத்திலே**
**'மானைப் பிரியாது கழை**
**விளையாடும்'**

என்பதனால், நீயும் தலைவியை பிரியாது விளையாட வேண்டும் என்ற பொருள் உள்ளுறை உவமம், விலங்கொடு தோன்றிப் புலப்படுமாறு அமைந்துள்ளது.

தொல்காப்பியம், எல்லையற்ற இன்பம் தருவதே உள்ளுறை அமைப்பதன் நோக்கம் என்பதை,

**'அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்**
**தன்வயின் வருதலும் வகுத்த பண்பே'**
**(பொரு-48)**

என்று கூறியுள்ளார். குறிப்புப் பொருள் சார்ந்து இவ்வுள்ளுறை ஐந்து வகைப்பட்டு வரும் என்பதை தொல்காப்பியர்.

**'உடனுறை, உவமம், சுட்டுநகைச் சிறப்பென**
**கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே'**
**(பொரு-47)**

என்று கூறியுள்ளார். உடனுறை, சுட்டு உள்ளுறை, சிறப்பு உள்ளுறை.உவம உள்ளுறை, நகை உள்ளுறை என்னும் ஐந்து உள்ளுறைகளைக் கூறிய அவர், உவம உள்ளுறையைப் பற்றியும் (தொல்.அகத்.4951) சிறப்பு உள்ளுறையைப் பற்றியும் (தொல்.பொரு-50) சில கருத்துக் கூறி விளக்கியுள்ளார்.

இவ்வகை உள்ளுறைகளில் உவம உள்ளுறை நீங்கலாக, மற்றவை சங்க இலக்கியங்களுக்கு உரை வகுத்த உரையாசிரியர்களால் பாடல் உரையில் பொதுவாக விளக்கிக் காட்டப்படவில்லை.

நற்றிணைக்கு உரைவகுத்த பின்னத்தூர் நாராயணசாமியும் உவம உள்ளுறை என்பதையும் (இறைச்சி என்ற பெயரில்) வேறு உள்ளுறையையும் மட்டும் கூறிச சென்றுள்ளார். இந்நிலையில் நற்றிணையில் ஐவகை உள்ளுறைகளும் பொருந்தி வருவது குறிப்பிடத்தக்கது.

உவம உள்ளுறைக்கு ஓர் எடுத்துக் காட்டு

தலைவனைத் தோழி வரைவு கடாவுகிறாள் (களவில் தோழி-தலைவனிடம் தலைவியை மணந்து கொள்ளும்படி வேண்டுதல்) 'கொல்லவல்ல ஆண்புலியானது, களிற்றியானையை நீர் அருந்தவரும் நீர்த்துறையிலே பிடியானை புலம்புமாறு தாக்கிச் கொல்லும் வெற்பனின் சொற்களை மெய்யெனத் தேறி, யாம் நடுஇரவிலும் உறங்கப்பெறாது, எமது நலத்தை இழந்துவிட்டோம். இப்பழி தூற்றும் ஊர், அலர் கூறும் பெண்களின் அம்பல் மொழியை மெய்யென நம்பி, மேன்மையிலாத் தீய சொற்களைப் பொதித்த ஒலியை உடையதாகத் தான் இழந்தது என்னே!' (நற்-36) என்பது பாடலின் கருத்து.

'கொல்லவல்ல ஆண்புலியானது, களிற்றியானையை நீர் அருந்தவரும் நீர்த்துறையிலே பிடியானை புலம்புமாறு தாக்கிக் கொல்லும் வெற்பன்' என்பது குறிப்புப் பொருளை உள்ளடக்கி உள்ளது. இஃது உவம வகையால் கொடுமை நிறைந்த தலைவியின் தமர் (உறவினர்) தலைவியை நாடிவரும் இடத்திலே தலைவி புலம்புமாறு தலைவனுக்குத் துன்பம் இழைப்பர்-என்று குறிப்புப் பொருளைத் தோற்றுவித்தலின் உள்ளுறை உவமம் ஆயிற்று. இவ்வகையில் மேலும் சில இடங்களைச் சுட்டலாம்.

இறைச்சி

இறைச்சி என்ற கோட்பாட்டினைத் தொல்காப்பியம் ஆறு இடங்களில் குறிப்பிடுகிறது. வடமொழியில் உள்ள 'தொனி'-கோட்பாடுடன் இதனை இணைத்துப் பார்க்கும் போக்கு தமிழறிஞர்களிடம் காணப்படுகிறது. கூறவந்த பொருள் வெளிப்படாது மறைவாக இருக்க, அதை உணர்த்த, வோறொரு பொருள் வெளிப்படையாக நிற்குமாறு அமைக்கும் இலக்கிய உத்தியே இறைச்சி.

**'இறைச்சி தானே உரிப்புறத் ததுவே'**
**(தொல்.1175)**

மக்களின் காதல் ஒழுக்கங்கள் உரி; பிற உயிர்களின் காதல் செயல்கள் உரிப்புறத்தன. எனவே இறைச்சி என்பது உரிப்புறத்தது. இது எந்த ஒரு குறிப்புப் பொருளையும் சுட்டித் தன்னுள்ளே வேறொரு பொருள் தருவது. இலக்கியங்களில் பாடப்படும் இறைச்சியின் பொருளுக்கும் விலங்கினம்-பறவையினம் போன்ற கருப்பொருளுக்கும் உள்ள தொடர்பைக் கூறுவது. உயிரினங்களின் அன்புச் செயல்களை மிகுவிப்பன 'இறைச்சி' என்பர்.

தெய்வம் முதலாகிய கருப்பொருளின் கண்ணே பிறப்பதே இறைச்சிப் பொருள் என்பது அகப்பொருள் வரையறை.

**'கருப்பொருட் பிறக்கும்**
**இறைச்சிப் பொருளே'**
**(ஒழி-31)**

கருப்பொருளின் வகைகளாக அகப்பொருள் பதினான்கு வகைகளைக் குறிப்பிடுகிறது. 'ஆரணங்கு (தெய்வம்), உயர்ந்தோர், தாழ்ந்தோர் (அல்லாதோர்), புள்,விலங்கு, ஊர், நீர், பூ, உணவு. பறவை. யாழ், பண், தொழில் எனக் கருவீரெழுவதைத் தாகும்' (அகத்-19). ஐந்து திணைகளுக்கு உரிய கருப்பொருள் இவையிவை என பொருள் தெளிவாகக் கூறுகின்றன.

வழியிடைக் காணப்படும் இயற்கையையும் அவற்றின் அன்புணர்வைத் தூண்டும் காட்சிகளையும் காதல் செய்திகளையும் குறிப்பது. சிறப்பான ஒருவகை உணர்வை அடிப்படையாகக் கொண்ட குறிப்புணர்வு என்றும் இறைச்சியைக் கூறுவர். இதை ஆய்வு நோக்கில் கருப்பொருள் இறைச்சி, தெரிபொருள் இறைச்சி, குறிப்புப்பொருள் இறைச்சி என மூன்று வகையாகப் பிரிக்கலாம். அது அன்பு, காதல், அருள், மனிதநேயம் ஆகியவற்றுக்குத் தூண்டுதலாக அமையும். மனிதனின் உள்ளுணர்வாகிய காதலைத் தூண்டும் புறச்சூழல்களே இறைச்சி என்றும் கூறப்படுகிறது.

**தெரிபொருள் இறைச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு**

**தெரிபொருள் இறைச்சியில் கருப்பொருள்களின் செயல்களும் அவற்றிற்கான முடிவுகளும் உடன் கூறப்படும்.**

**விருந்தெவன் செய்கோ தோழி சாரல்**
**அரும்பர மலர்ந்த கருங்கால் வேங்கைச்**
**சுரும்பிமிர் அடுக்கம் புலம்பக் களிறட்டு**
**உரும்பின் உள்ளத்து அரிமா வழங்கும்**
**பெருங்கடல் நாடன்.... ....'**
**(நற்-12)**

விளைவயிற் பிரிந்த தலைவன் குறித்த பருவம் வந்ததும்,

## இலக்கிய சுவை...

அவன் வராதது கண்டு ஆற்றாமையில் வாடிய தலைவியை ஆற்றுவிக்கும் தோழி, 'அடுக்கம் புலம்பக் களிற்று யானையைக் கொன்று சிங்கம் இயங்கும் மலைநாடன் உன்தலைவன், எனவே, அவன் உனது பசப்பு வருந்திக் கெட உனக்கு உண்டான காமநோயைப் போக்கி உன்னைவிட்டு அகலாமல் இருப்பான்' என்பது குறிப்பு. இந்தக் கருப்பொருளாகிய களிற்று யானையின் செயல்களும் அவற்றிற்கான முடிவுகளும் உடன் கூறப்பட்டதால் இது இறைச்சிப் பொருளானது. நற்றிணையில் மட்டுமே 165 பாடல்கள் இறைச்சிப் பொருளில் அமைந்துள்ளன.

காதல் உணர்வைக் குறிப்பதற்கும் தூண்டுவதற்கும் தலைவனை நெறிப்படுத்தவதற்குமே இறைச்சிப் பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சங்ககால மக்கள் தங்கள் மகிழ்ச்சியையும் மன வருத்தத்தையும் நேரடியாகக் கூறாமல் மறைமுகமாகக் கூற 'உள்ளுறை உவமை' மற்றும் 'இறைச்சியை இலக்கிய உத்திகளாகக் கையாண்டு கூறியுள்ளது நாகரிகத்தின் வெளிப்பாடு என்பதை விட உச்சநிலையை கடைப்பிடித்துள்ளனர் என்றே கூறத்தோன்றுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மீனவர் பகுதியில் படம் எடுக்கவேண்டுமா? தயாரிப்பு நிர்வாகிகளைக் கேட்டுப் பாருங்கள். தலைதெறிக்க ஓடுவார்கள். ஊர் கட்டுப்பாடு தலைவரின் கட்டளை எல்லாவற்றுக்கும் இராணுவம் போல் கீழ்ப்படிவார்கள் அந்த பகுதி மக்கள். ஆனால், சில நேரங்களில் மட்டும்தான் இந்தக் கட்டுப்பாடு. சில நேரங்களில் அது செல்லாத காசாகிவிடுவதும் உண்டு. அந்தப் பகுதி மக்களை அன்போடு அணுகினால் மட்டுமே தொடர்ந்து படம் எடுக்க முடியும். இது சாதாரண வையாபுரி படத்துக்கும் பொருந்தும். பலம் வாய்ந்த விஜய் படத்திற்கும் பொருந்தும். அப்படித்தான் இவர்களை அன்பால் கட்டிப்போட்டிருக்கிறார் விஜய். சுறா படத்தில் இவருக்கு மீனவர் வேடம். கொச்சின் கடற்கரை துவங்கி பாண்டிச்சேரி கடற்கரை வரை தொடர்ந்து கரையோர கிராமங்களில் படம் பிடித்து வருகிறார்கள். அனுமந்தை என்ற மீனவர் கிராமத்தில் தற்போது படம் எடுக்கப்பட்டு வருகிறது. அங்குள்ள சுமார் இரண்டாயிரம் மீனவ மக்களுக்கு தனது சார்பில் பிரியாணி விருந்து கொடுத்திருக்கிறார் விஜய். அதுமட்டுமல்ல, இந்த விருந்தை தன் கையாலேயே பரிமாறவும் செய்திருக்கிறார். இதனால் மிகுந்த மகிழ்ச்சியடைந்திருக்கிறார்கள் அந்த கிராமத்தைச் சேர்ந்தவர்கள். இந்த பிரியாணி விருந்துக்கு காரணம்? வேறொன்றுமில்லை. விஜய்யை அடிக்கடி சாப்பிட அழைக்கிறார்களாம் அங்குள்ள வீடுகளுக்கு. நள்ளிரவு இரண்டு மணிவரை படப்பிடிப்பு போவதால் தன்னால் அவர்கள் வீட்டுக்குச் செல்ல முடியவில்லையே என்று வருந்தினாராம் விஜய். அவர்கள் வீட்டுக்கு போவதைவிட தானே விருந்தளித்து அவர்களுடன் அமர்ந்து சாப்பிட்டால்? அதனால்தான் இந்த ஏற்பாடாம்.

## சினிமாவுக்கு கவர்ச்சி அவசியம்

சினிமாவுக்கு கவர்ச்சி அவசியம். அதனால் கவர்ச்சி தான் என் தெரிவு என்று போட்டு உடைக்கிறார் நடிகை ரீமாசென். ஆயிரத்தில் ஒருவன் படத்தை முடித்து விட்டு ரீசல்ட்டுக்காக காத்திருக்கும் ரீமா அளித்துள்ள பேட்டியில், தமிழில் சில படங்கள் நடித்திருந்த போதிலும் எனக்கான அடையாளம் இன்னும் கிடைக்கவில்லை என்று தான் சொல்ல வேண்டும். அந்த குறையை ஆயிரத்தில் ஒருவன் தீர்த்து வைக்கும் என்ற எதிர்பார்ப்புத் தான், சில படங்களின் வாய்ப்புகளை இழக்க காரணம். ஆயிரத்தில் ஒருவன் என்னை வேறு தளத்துக்கு கொண்டு செல்லும் படமாக இருக்கும். இந்தப் படத்துக்குப் பின்தான் அடுத்த படங்களில் நடிக்கலாம் என இருந்தேன். விரைவில் அடுத்த படம் பற்றிய அறிவிப்புகள் வரும் என்று கூறியுள்ளார். கவர்ச்சி குறித்த கேள்விக்கு, சினிமா என்றாலே கவர்ச்சி என்பது முக்கியமான ஒன்றாகி விட்டது. யதார்த்த சினிமாக்களில் கூட கவர்ச்சியை எதிர்பார்க்கிறார்கள். பொழுதுபோக்காக சினிமாவில் நடிக்கும் போது கவர்ச்சி அவசியம். கவர்ச்சியாக நடிப்பதில் தவறு இருப்பதாக நினைக்கவில்லை. கதைக்குத் தானே கவர்ச்சியாக நடிக்கின்றேன். அதனால் தான் அது என் தெரிவு என்று கூறுகிறார் ரீமா.





பாஸ் என்கிற பாஸ்கரன்
ஆர்யா-நயன்தாரா

# Saturday சினிமா

## வடிவேலுவின் தாராளம்



ஆதித்யா, சிரிப்பொலி என்று எந்த சனலை திறந்தாலும் வயிறு குலுங்க வைக்கிறார் வடிவேலு. அதிலும், வின்னர் பட நகைச்சுவையைப் பார்த்தால் விலா வெடித்துப்போகும். ஆனால் அப்படத்தின் தயாரிப்பாளர் கதையைக் கேட்டால் மனசே வெடித்துப்போகும். கோடிக்கணக்கான பணத்தை போட்டு படம் எடுத்தவர். இன்று யாரும் சீண்டாத தெருக் கோடியில் இருக்கிறாராம். ஒரு ஹோட்டலில் சர்வராக வேலை பார்க்கிறாராம். படம் முடிகிற நேரத்தில் இவரது நிலையைப் பார்த்து மனம் இரங்கிய வடிவேலு சம்பளத்தைக் கூட வேண்டாம் என்று தியாகம் செய்தாராம். ஆனால், படத்தின் முக்கிய நடிகரும் அவரது அப்பாவும் கொடுத்த தொல்லைதான் இவரது இந்த நிலைக்கு காரணமாம்.

## கருணாஸின் ஆட்டம்



திண்டுக்கல் சாரதி வெற்றியைத் தொடர்ந்து கருணாஸ் கதாநாயகனாக நடித்து வரும் படம் அம்பா சமுத்திரம் அம்பானி. இந்தப் படத்தில் நடிப்பதுடன் இசையமைத்தும் இருக்கிறார். ராஜாதிராஜா படத்துக்கு கருணாஸ் இசையமைத்தது தான் கன்னி முயற்சி. அந்தப் படத்தில் அவரது குத்துப் பாடலுக்கு கொஞ்சமாக ஆதரவும் கிடைத்தது. அம்பா சமுத்திரம் அம்பானியில் ரகஸியாவுடன் ஒரு குத்துப் பாடலுக்கு கருணாஸ் ஆடியிருக்கிறார். ஒத்தக்கல்லு ஒத்தக்கல்லு மூக்குத்தியாம் ஒத்தையிலே போறவளே நீ நிப்பியாம்.. என்று போகிறது பாட்டு. சமீபத்தில் முமைத்கானுடன் ஆட்டம் போட்டவர் இப்போது ரகஸியாவுடன் ஆடியிருக்கிறார். அடுத்து யார்...? மேக்னா நாயுடுவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான் ஆர்யாவை காதலிக்கவில்லை – ஷர்மிலா

ஆர்யாவுடன் ஜோடியாக வந்ததால் அவரது காதலி என்பதா? என்கிறார் கன்னட நடிகை ஷர்மிலா மந்த்ரே. கன்னட நடிகை ஷர்மிலா மந்த்ரேவும் ஆர்யாவும் காதலிக்கிறார்கள் என்று தமிழ் மற்றும் கன்னட படவுலகில் பரபரப்பாகப் பேசப்படுகிறது. இதுபற்றி ஷர்மிலா கூறியதாவது; சமீபகாலமாக என்னை தொலைபேசியில் அழைக்கும் தோழிகளும் நண்பர்களும் ஆர்யாவை காதலிக்கிறீர்களாமே? என்றே கேட்கிறார்கள். இதைக்கேட்டு அதிர்ச்சி அடைந்தேன். இது வெறும் வதந்திதான். என்னை யாருடனாவது ஜோடி சேர்த்து பேசுவது, கதை கட்டி விடுவது என்பது வாடிக்கையாகிவிட்டது. அவர்களை ஏமாற்ற விரும்பவில்லை. ஆனால் ஆர்யா மீது ஆர்வமோ, காதலோ எனக்கு இல்லை. நாங்கள் காதல் ஜோடி கிடையாது. கடந்த மாதம் மைசூரில் சிக்கு புக்கு படப்பிடிப்பு நடந்தது. அதே இடத்தில் கன்னட படப்பிடிப்பில் கலந்துகொண்டேன். மதிய உணவு இடைவேளையில் நான், ஆர்யா, ஸ்ரேயா என இருபட நட்சத்திரங்களும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டோம். அவ்வளவுதான். ஐதராபாத்தில் நடந்த விருது வழங்கும் விழா ஒன்றிலும் நாங்கள் ஜோடியாக வந்ததாகச் சொல்கிறார்கள். அப்போது கூட மாதவன், ஸ்ருதிஹாசன், ஸ்ரேயா, ஜெனிபர் கோத்வல் என ஒரு நட்சத்திரக் கூட்டமே பங்கேற்றோம். இதை வைத்துக் கொண்டு காதலிக்கிறார்கள் என்பதில் என்ன நியாயம் இருக்கிறது? இதுபற்றி ஆர்யாவிடமே நான் கூறினேன். அதைக் கேட்டு சிரித்தார்.

# நயனின் ஆயுர்வேத சிகிச்சை



அசைஞ்சா தேரு, ஆடினா அலைகடல்னு அழகா இருந்த நயன்தாராவுக்கு இப்போது கண்ணாடி பார்த்தாலே கவலையாக இருக்கிறதாம். (அவருக்கு மட்டுமா?) கொஞ்சம் புஷ்டியானால் அழகு கூடுமே என்றார்களாம் கூடவே இருக்கிற தோழிகளும் தோழர்களும். ஆனால், அதையெல்லாம் அந்த நேரத்தில் பிடிவாதமாக மறுத்து வந்த நயன் திடீரென்று வேறொரு முடிவுக்கு வந்திருக்கிறாராம். தன் கைவசம் இருக்கிற படங்களை முடித்துவிட்டு சுமார் ஒரு மாதம் நீண்ட விடுமுறை எடுக்கப்போகிறாராம். இந்த நேரத்தில் கேரள ஆயுர்வேத சிகிச்சை செய்து உடலையும் மனசையும் முன்பு போல பொலிஷ் ஆக்கிக் கொள்வது என்பது தான் நயன்தாராவின் திட்டம். அரை செஞ்சுரியை எட்டிய அல்லது தாண்டிய நாயகர்கள் எல்லோருமே இந்த ஆயுர்வேத முகாம்களில்தான் தஞ்சமடைகிறார்கள். இதையெல்லாம் நன்றாகக் கேள்விப்பட்டும் இத்தனை காலம் அதில் அக்கறை காட்டாத நயன்தாரா இப்போது சம்மதிக்க என்ன காரணம்? மனம் கவர்ந்தவரின் விருப்பமும் அதுவாக இருப்பதால்தானாம். "கவலையிலேயே உன் முகம் மாறிடுச்சு. உடம்பை பார்த்துக்கோ" என்றாராம் அக்கறையாக.

# பிரபு மகனை நடிக்க வைக்க முயற்சி



சிவாஜியின் வாரிசாக ராம்குமார், பிரபு நடிகர்களாக முத்திரை பதித்தார்கள். சில படங்களுக்கு பிறகு தயாரிப்பாளராகி விட்டார் ராம்குமார். ஆனாலும் அவரது வாரிசாக மகன் துஷ்யந்த் நடிகரானார். இப்போது சிவாஜி புரொடக்ஷன் தயாரிப்பு பணிகளை கவனித்துக் கொண்டிருக்கிறார். இதற்கிடையில் பிரபுவின் மகன் விக்ரமை நடிகராக்க சில இயக்குனர்கள் முயன்று வருகின்றனர். பிரபுக்கு ஓ.கே. என்றாலும் விக்ரம், 'நான் டெக்னீஷியனாகத்தான் வருவேன்' என்று பிடிவாதம் பிடிக்கிறாராம். இந்நிலையில் துஷ்யந்துடன் இணைந்து 'அசல்' பட தயாரிப்பு பணிகளை ஆர்வமாக செய்து வருகின்றார்.



குட்டி
தனுஷ்-ஸ்ரேயா

# மகள் இயக்கத்தில் பார்த்திபன்

நமது நட்சத்திரங்கள் மனைவி விடயத்தில் எப்படியோ மகள் விடயத்தில் நிச்சயமாக ரோல் மொடல்கள் தான். தனது மகள் வரலட்சுமியின் நாட்டிய நாடக அரங்கேற்றத்தின் போது உணர்ச்சி வசப்பட்டு கண்ணீர் வடித்தார் சரத்குமார். மகளின் திறமையைப் பார்த்து வந்த ஆனந்த கண்ணீர் அது. கமல்ஹாசன் தனது மகளின் வளர்ச்சியில் மிக கவனம் வைத்திருக்கிறார் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. பார்த்திபன் மட்டும் சும்மாவா? மகள் கீர்த்தனாவின் திறமையை அருகில் இருந்து ஊக்குவிப்பது தான் அவரது முதன்மையான வேலை. மணிரத்னத்தின் கன்னத்தில் முத்தமிட்டால் படத்தில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானாலும் கீர்த்தனாவின் நோக்கம் இயக்குனராவது. அதற்கான பயிற்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருப்பவர், விரைவில் குறும்படம் ஒன்றை இயக்குகிறார். குறும் படத்தில் நடிக்கவிருப்பவர், வேறு யார் பார்த்திபன் தான். தற்போது பார்த்திபன் வித்தகன் படத்தை இயக்கி நடித்து வருவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் பாதுகாப்புக் கெடுபிடிகள்

யாழ்.குடாநாட்டில் இராணுவச் சோதனை நடவடிக்கைகள் இன்னும் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. இது குறித்து மக்கள் தமது விசனத்தை வெளியிட்டு வந்தாலும் கையாலாகாதவர்கள் போன்ற அவர்களின் கட்டளைக்குப் பணிந்து பயந்து அதைப்பின்பற்றும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றனர்.

பஸ்களில் பயணத்தை மேற்கொள்ளும் பயணிகளே இத்தகைய சோதனைகளுக்கும் கெடுபிடிகளுக்கும் இலக்காகி வருகின்றனர்.

யாழ்.குடாநாட்டின் நான்கு வலயப் பிரிவுகளாக் இருந்து வரும் வலிகாமம்,வடமராட்சி,தென்மராட்சி,தீவகம் ஆகிய பிரதேசங்களுக்கிடையே பயணத்தை மேற்கொண்டு வரும் பயணிகள் முக்கிய வீதிகள் மற்றும் சந்திகளில் வைத்து பஸ்களிலிருந்து இறக்கப்பட்டு நீண்ட வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டு சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

அவர்கள் எடுத்துச் செல்லும் பொருட்கள் ஆள் அடையாள அட்டை மற்றும் உடற்சோதனைகளுக்குட்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

யாழ்.நகரிலிருந்து வலிகாமம் பகுதிக்குச் செல்வோர் ஓட்டுமடம் சந்தி,தட்டாதெருச்சந்தி உட்பட முக்கிய வீதிகளிலும் வடமராட்சிப் பகுதிக்குச் செல்வோர் கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய் மற்றும் வல்லைவெளி போன்ற இடங்களிலும் தென்மராட்சிப் பகுதிக்குச் செல்வோர் அரியாலை, செம்மணி உள்ளிட்ட பகுதிகளிலும் தீவகப்பகுதிக்குச் செல்வோர் பண்ணை,அல்லைப்பிட்டி போன்ற பகுதிகளிலும் வைத்து இறக்கப்பட்டு வீதிச்சோதனைகளுக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

நாட்டில் யுத்தம் நீங்கி நாடு முழுவதும் ஒரு குடையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. சிறுபான்மையான மக்கள் எந்தநேரத்திலும் எங்கு வேண்டுமானாலும் சென்று வரலாம் என்றெல்லாம் கூறிவரும் அரசாங்கம் இன்றும் இத்தகைய சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இராணுவத்துக்கு அதிகாரத்தை வழங்கி வருகிறதா? அல்லது இராணுவத்தினர் தமது பாதுகாப்புக்காகத் தன்னிச்சையாகச் செயற்பட்டு வருகின்றனரா? என்றெல்லாம் பொதுமக்கள் தரப்பில் கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன.



நாட்டில் பெரும்பான்மை இனமக்கள், சிறுபான்மை இன மக்கள் என்ற பேதங்களுக்கு இடமில்லை என்றும் தேசத்துக்காக உழைக்கும் அனைவரும் இந்நாட்டு மக்களே.அவர்களில் சிறுபான்மை, பெரும்பான்மை என்று எதுவும் கிடையாது என்றெல்லாம் கூறிவந்த அரசு,நாட்டில் யுத்தம் முடிவடைந்த பின்னரான இக்காலப் பகுதியிலும் மக்களை இவ்வாறான சோதனைக்கெடுபிடிகளுக்கு உட்படுத்தி வருவது தமது நேர காலம் உள்ளிட்ட பல்வேறு வழிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தி வருவதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்காக பல வாக்குறுதிகளை அள்ளிச்சொரிந்து வரும் ஆளும் தரப்பினர் மற்றும் எதிர்த்தரப்பினர் இது குறித்துக் கண்டுகொள்வதில்லையா? எனவும் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

வங்கி,வைத்தியசாலை,பாடசாலை உட்பட துறைசார் பணிகளுக்குச் செல்லும் தாம் நீண்ட வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டு இத்தகைய கெடுபிடிகளுக்குட்படுத்தப்படும் போது நேரம் தாமதித்தே பணிகளுக்குச் செல்லவேண்டியுள்ளதென்றும் இதனால் தமது பணிகளைச் சீராகக் கவனிக்க முடியாதிருக்கிறதென்றும் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, இனி வருங்காலங்களிலாவது இத்தகைய சோதனை நடவடிக்கைகளை தளர்த்தி அரசு அறிவித்தது போன்று எந்த நேரத்திலும் எங்கு வேண்டுமானாலும் எவரும் போய் வரலாம் என்றதொரு சூழ்நிலையைத் தோற்றுவிக்க சம்பந்தப்பட்டவர்கள் குரல்கொடுக்க முன்வருவார்களா என்றும் அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்?

**செ.சக்திதாசன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கவிதை

என் கவிதையின் அர்த்தம்
கேட்கிறாய்
அர்த்தத்தில் சுய வாழ்வினை
எழுதுவது கவிதையல்ல
ஒவ்வோர் நிலையிலும்
எம்மை வைத்து கற்பனை
வடிவில் வருவது தான் கவிதை
கவிஞன் எழுதுகிறான்
பல கவிதைகள்
அவை எல்லாம்
அவனின் சொந்த விடயமா?
ஒருநாளும் இல்லை
கண்ணால் காண்பது
தினமும் நடப்பவை
கவிஞனின் கற்பனை
இதன் அடிப்படையில்
வருவது தான் கவிதை
இதனை முதலில் புரிந்து கொள்
கவிதை என்பது
தானாகப் புரியும்.

**சுபா**
**மானிப்பாய்**

## அழகானது நீயும்... உன் நினைவுகளும்...



கதவையும்...
அடைத்திருந்தேன்
ஜன்னலையும்...
சாத்தியிருந்தேன்
கொசுவலையும்...
போட்டிருந்தேன்
போர்வையாலும்...
மூடியிருந்தேன்
அதையும் தாண்டி
நுழைகிறதே-உன்
அழகான ஞாபகங்கள்
வருக!வருக! என
வரவேற்கிறேன்

37 பாகை செல்சியஸுக்கு
மேலாக உடல் வெப்ப
மாகி
மூன்று வாரங்களாய்...
வைத்தியசாலையில்
தடுப்பில் இருந்தேன்
அரசினர் வைத்தியசாலையின்
மருந்து மாத்திரைகளுக்கு
தணியாத காய்ச்சல்...
உன் வருகையின்போது
குளிராய் நடுங்க வைத்தது.

**வி.முகிலன், நெடுந்தீவு-13**

## நிஜங்களைத் தேடி நியாயம் வருமோ...

சிந்திய குருதி
தீர்த்த மாகுமோ
நாறின பூவும்
நறுமணம் வீசுமோ
சிதைந்த கருவறை
திருவுருமோ
கண்மணி கற்பு
மாண்புமோ
போன மானமும்
திரும்புமோ
கண்ணீர் நதியை
அணைக்குமோ
காய்ந்த உடலில்
பால் சுரக்குமோ
கதறியழும் பிள்ளை
பசி தீருமோ
நிழலில் உயிரை
காண முடியுமோ
நிஜங்களைத் தேடி
நியாயம் வருமோ

**சி.ஜெகன்**
**பெரியபுலோ**

## பெண் விடுதலைக்காய்...

கல்விக் கண் திறக்கச் செய்வோம்
கசடுகளை ஓயச் செய்வோம்
முகில்களைக் கிழிக்கச் செய்வோம்
முறம் கொண்டு எழுந்து நிற்போம்
விண்வெளியில் களமமைப்போம்
மண்ணுலகைப் பொன்னுலகாக்குவோம்
பூவையரின் விழி நீரைப்
புயலாக மாறச் செய்வோம்
பொங்கியெழுந்தே புதியதோர்
சரித்திரம் படைப்போம்
கொழுந்து பறிக்கும் கைகளை
கொடிகள் பிடிக்கச் செய்வோம்
பானை பிடிக்கும் கைகளால்
பாரை வாழ வைப்போம்
நெஞ்சத் துணிவு கொண்டு
நீதிக்காய்த் தினம் உழைப்போம்
தொட்டிலாட்டும் கைகளால்
நாட்டைக் கட்டியாளச் செய்வோம்
வெட்டிப் பிளந்தாலும் பெண்
விடுதலைக்காய் மூச்சிறைப்போம்.

**செல்வநாயகம் ரவிசாந்**
**வீரமனை,**
**குப்பிளான்**

## உன்னுடன் நான்...!

என் வாழ்க்கை பாதையிலே
வசந்தம் வீச வைத்தவளே
உன் நினைவோடு நான்
நடை பிணமாய்
சிரிப்பதாய் உணர்கிறேன்
மறு நிமிடமே உன் நினைவால்
தவிக்கிறேன்.

என்னை ஏதோ செய்தவளே
நீங்காத உன் நினைவோடு
நீடிக்கின்றது என் கனவுகள்
நீ வந்து தங்கிய நெஞ்சில்
யாருக்கும் இடமும் இல்லை.

நீ தந்த நினைவேட்டுடன்
என் நினைவு
கொஞ்சம் கொஞ்சமாய்
சிதைகிறது
வசந்தமான என் வாழ்வில் நுழைந்து
சூறாவளியாய் வீசி என் நினைவை
கலைத்தவளே
நீ எங்கேயோ? அங்கே உனக்காய்
பிறப்பேன்

**செ. மதிவதனி, சுன்னாகம்**

## என் அனுபவத்தின் விம்பம்

குருடரைக் காண
கண்களை மூடினேன்
ஊமையுடன் உரையாட
மௌனத்தைக் கற்றேன்
செவிடரை உணர
கருத்துக்கு மதிப்பளித்தேன்
ஊனமுற்றோரை நோக்க
உதவி செய்யப் பழகினேன்
ஏழைகளைக் காண
சேமிப்பை ஏற்படுத்தினேன்
அன்பில்லாதோரைச் சந்திக்க
அன்பு மனங்களை இனங்கண்டேன்
மரணத்துடன் போராடும் ஜீவனைக் காண
மரண வலியை உணர்ந்தேன்
காதலிக்கத் தெரியாதவர்களைக் காண
காதலைப் புரிந்தேன்
வேதனைகளை எதிர்நோக்க
பிறர் கண்ணீரைத் துடைத்தேன்
தோல்விகளைக் காண
வெற்றியின் இரகசியம் உணர்ந்தேன்


**மகாலக்ஷ்மி ஜெகதீஸ்வரன்,**
**மூளாய்**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமேனால்
'Saturday மெயில்'
இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலத்தின் உறுதியை அறிவது எப்படி?

ஒரு புதிய கண்டுபிடிப்பு எப்போது நிகழ்த்தப்படுகிறது தெரியுமா? அவசியம் ஏற்படும்போது மட்டுமே புதுப்புது கண்டுபிடிப்புகள் நிகழ்த்தப்பட்டுள்ளன என்பது வரலாறு.



பல நாடுகளில் பாலம் இடிந்து பலர் உயிரிழந்த சம்பவங்களும் உண்டு. பாலத்தின் உறுதித் தன்மையை விரைவாகக் கண்டறிய வேண்டிய அவசியம் பொறியியலாளர்களுக்கு ஏற்பட்டது. மிக்சிகன் பல்கலைக் கழக பொறியியலாளர் ஜெரோம் லின்ச் என்பவர் பாலத்தின் மீது ஒரு வண்ணப்பூச்சைத் தெளித்து அதன் மூலம் பாலத்தின் உறுதித் தன்மையை அறிந்து கொள்ளும் வழியைக் கண்டுபிடித்தார்.

இந்த முறையின் மூலம் பாலத்தின் எந்தப் பகுதியையும் உடைத்தெடுக்க வேண்டிய அவசியமில்லை. இலட்சக்கணக்கான வாகனங்கள் கடந்து செல்லும் பாலங்கள் எவ்வளவு உறுதியாக இருக்கின்றன என்பதை உடனுக்குடன் அறிந்துகொள்ள இந்தக் கண்டுபிடிப்பு மிகவும் உதவியாக இருக்குமில்லையா?

அரிமானத்தின் காரணமாகப் பாலங்கள் வயதாகி வலிமை இழந்துபோவது இயற்கையான நிகழ்வு. பொறியியலாளர்கள் என்னதான் கண்களில் விளக்கெண்ணெயை விட்டுக்கொண்டு சோதனை செய்து பார்த்தாலும் பாலத்தில் ஏற்பட்டுள்ள மிகச் சிறிய சேதாரங்கள் மனிதக் கண்களை ஏமாற்றிவிடுகின்றன.

பாலத்தின் மேற்புறம் ஒரு படலமாக இந்தச் சிறப்புக் கலவை தெளிக்கப்படுகிறது. படலத்தின் அடியில் நுண்ணிய காபன் நானோ குழாய்கள் பரப்பப்பட்டிருக்குமாம். காபன் மின்கடத்தும் பொருள். மின்னோட்டம் செலுத்தப்படும்போது, பாலத்தில் ஏற்பட்டுள்ள சேதங்களை ஒரு கணினி காட்சித் திரையில் விரியச் செய்யுமாம். பாலத்தில் ஏற்பட்டிருக்கும் விரிசல் மேற்பரப்பிலும் காணப்படும் என்பதும் பாலத்தில் உள்ளே ஏற்பட்டிருக்கும் அரிமானம் மேற்பரப்பிலும் உண்டாகியிருக்கும் என்பதுதான் இந்த ஆய்வு முறையின் தத்துவம்.

# உலகின் மிகப்பெரிய சோலார் அலுவலகம்




சூரிய ஒளியை மின்சக்திக்கு பயன்படுத்திக் கொள்ளும் சோலார் தொழில்நுட்பம் வேகமாகப் பெருகி வருகிறது. சோலார் கப்பல், விமானம், கட்டிடம், விளக்கு, அடுப்பு என்று இதன் பயன்பாடு அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

பல்வேறு நாடுகளில் சோலார் கட்டிடங்கள் இருக்கின்றன. கட்டப்படுகின்றன. தற்போது சீனாவில் ஷாங்டாங் நகரில் டெலு பகுதியில் உலகின் மிகப் பிரம்மாண்டமான சோலார் கட்டிடம் கட்டப்படுகிறது. 8 இலட்சம் சதுர அடி கொண்ட கட்டிடத்தின் மேற்பகுதியில் சோலார் தகடுகள் பதிக்கப்படுகிறது. இது அந்தப் பகுதியின் மின் தேவையில் 30 சதவீதத்தை நிறைவு செய்யும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த அலுவலக கட்டிடம் இன்னும் ஒரு ஆண்டுக்குள் செயற்படத் தொடங்கும் என்று தெரிகிறது.

வருங்காலத்தில் கட்டிடங்களில் அலங்காரக் கண்ணாடிகளுக்குப் பதிலாக சோலார் தகடுகளைப் பதிக்கும் பழக்கம் அதிகரிக்கும் என்றால் ஆச்சரியமில்லை.

# வருகிறது பக்றீரியா வெடிகுண்டு!

விஞ்ஞானம் வளர வளர ஆயுதங்களும் பெருகி வருகின்றன. ஒளியையும் காற்றையும் எதிர்காலத்தில் ஆயுதமாகப் பயன்படுத்துவார்கள்



என்று பிரபல ஜோதிடர் நாஸ்டர்டாமஸ் கணித்துக் கூறியிருக்கிறார். வளர்ந்து வரும் அறிவியல் நவீனங்களும் அதை உண்மைப்படுத்தும் விதத்திலேயே ஆயுதங்களைக் குவித்து வருகின்றன.

சமீபத்தில் அமெரிக்கா ஒளியைச் சிறிய அளவிலான ஆயுதமாகப் பயன்படுத்தும் யுக்தியைக் கண்டுபிடித்துள்ளது. ஆனால், அது இராணுவ வீரர்களின் மருத்துவ உதவிக்குப் பயன்படும் கத்தி என்று அமெரிக்கா அறிவித்தது. இதேபோல விதவிதமான ஆயுதங்கள் பல நாடுகளிடம் இருக்கின்றன.

இந்தப் பட்டியலில் புதிதாகச் சேரவிருக்கிறது பக்றீரியா வெடிகுண்டு.

பக்றீரியா என்பது நுண்ணுயிராகும். இதில் சைனோ பக்றீரியா என்ற ஒரு வகை பக்றீரியாக்களில் சிறிய மாற்றங்களை ஏற்படுத்தி பெற்றோலியம் தயாரிக்கிறார்கள் என்று கடந்த வாரம் பார்த்தோம். இதே பக்றீரியாவில் வேறு சில மாற்றங்களை ஏற்படுத்தினால் அது வெடிக்கும் தன்மையுடையதாக மாறிவிடுகிறது.


அதாவது இந்த பக்றீரியாவுடன் பக்றீரியா பேஜ் எனப்படும் மற்றொரு வகை பக்றீரியாக்களின் ஜீன்களைச் சேர்த்தால் அது இந்த மாற்றத்தைப் பெறுகிறது. பின்னர் அந்தப் பக்றீரியாக்கள் 'நிக்கல்' என்ற உலோகத்தை நுகரும் வாய்ப்பு ஏற்பட்டால் வெடித்துச் சிதறுகிறது. எனவே, இதனைச் சிறிய வெடிகுண்டாகப் பயன்படுத்த முடியும்.

பக்றீரியாக்கள் நுண்கிருமிகள் என்பதால் வேகமாகப் பரவும். அதில் இந்த மாற்றங்களைச் செய்து அனுப்பினால் எதிரிகளின் கோட்டைக்குள் எவ்வித பரிசோதனையிலும் சிக்காமல் உள்ளே நுழைந்து தாக்குதலை வெற்றிகரமாக முடித்துவிடும். எனவே, இது வொரு ஆபத்தான ஆயுதமாக அவதாரம் எடுக்கவிருக்கிறது.

## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



# புதிதாக 4 பூமிகள்!



நாம் வசிக்கும் பூமி சூரிய குடும்பத்தில் இருக்கிறது. பூமியில் மட்டுமே உயிரினங்கள் வசிக்கின்றன.

மற்றக் கோள்களில் உயிர்கள் வசிப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறைவாக உள்ளன. இருப்பினும் துணைக்கோளான சந்திரன், செவ்வாய் ஆகியவற்றில் தண்ணீர் இருப்பது அறியப்பட்டு உள்ளதால் அங்கு உயிரினங்கள் இருக்கும் வாய்ப்பு உண்டு என்கிறது விஞ்ஞானம். இந்தச் சந்தேகத்துக்கு இன்னும் சில ஆண்டுகளில் விடை கிடைக்கலாம்.

அதேபோல விண்வெளி ஆராய்ச்சியில் பூமி போன்ற தன்மை கொண்ட கோள்கள் எதுவும் இருக்கிறதா? என்றும் தீவிரமாகத் தேடப்படுகிறது. இந்தத் தேடல் முயற்சியில் கடந்த ஆண்டில் பாறைகளால் ஆன கிரகம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. சில வாரங்களுக்கு முன்பு பாதி அளவு தண்ணீர் நிறைந்த கோள் ஒன்றும் அறியப்பட்டது. இவற்றிலும் உயிர்கள் வசிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

இதன் தொடர்ச்சியாக தற்போது பூமி போன்ற தன்மை உடைய மேலும் 4 கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன. இவையும் சூரிய குடும்பத்திற்கு அருகிலேயே சுற்றுகின்றன.

இவற்றில் 3 கோள்கள் 61 விர்ஜினிஸ் எனப்படும் விருச்சிக ராசி நட்சத்திரக் கூட்டத்தின் சுற்றுவட்டப்பாதையில் சுற்றி வருகின்றன. இந்த மூன்றும் சூரியனின் இரட்டைப் பிறவி போன்ற தோற்றம் உடையவை. இதன் எடை பூமியைப் போல் 5 முதல் 24 மடங்கு வரை அதிகமாகும். 4 ஆவது கோள் 23 லிப்ரா எனப்படும் துலாம் ராசி நட்சத்திரக் கூட்டத்தைச் சேர்ந்தது.

இந்த 4 கோள்களுமே வாழ்வதற்கு ஏற்ற தன்மை கொண்ட பாறைகளால் ஆனது. இவை பூமியில் இருந்து சில ஒளியாண்டு தூரத்தில் தான் அமைந்துள்ளன.

இந்தப் புதிய கோள்களை அமெரிக்காவின் நியூ சவுத்வேல்ஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்து உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவயதுக் கர்ப்பம்!



ரம்மியமான இளமைப் பருவம். இது வண்ணத்துப் பூச்சியின் சிறகின் கீழ் வாரமெல்லாம் வசித்திடக் கேட்கும். மெல்லிய காற்றின் சங்கீதம் காதுக்குள் மெல்லிசையாய் ஒலித்திடக் கேட்கும். இதயச் சிறகை உரக்க விரித்து காதல் வானில் இதமாய்ப் பறக்கக் கேட்கும். சிறகசைத்து காற்றில்...பூமலரும். பூ மலர... வண்டின் வருகை கண்டு பூ மெல்ல நகும். வண்டு தேனை உண்டு பூவை விட்டு மெல்ல நகரும். வாடிய பூ சமூகத்தின் கரடு முரடான தரையில் பட்டு கண்ணாடிப் பூவாய்ச் சில்லென்று சிதறிப்போகும்.

பொதுவாக யௌவனப் பருவமானது 13–19 வயதுக்குட்பட்டது. இதனை ஆங்கிலத்தில் Teenage என்று அழைப்பர். இந்தப் பருவத்தில் பெரிதும் உள ரீதியான, உடல் ரீதியான முதிர்ச்சியைப் பெண்கள் கொண்டிருப்பதில்லை. இதனால் இந்தப் பருவத்தில் இவர்கள் தாயாகும்போது அதிகமான அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

அநேகமாக இவர்கள் தாயாவது கூட ஒரு திட்டமிட்ட செயற்பாடாக அமையாது. தவறுதலான செயலாகவே அமைந்து விடுகிறது. அத்துடன், இவர்கள் தங்கி வாழ்பவர்களாகவும் கல்வியைத் தொடர்பவர்களாகவும் மற்றும் சமூகத்தின் கூர்மையான பார்வைக்குள் தவறாது சிக்கிக் கொள்பவர்களாகவும் அமைகின்றனர். இவர்கள் உடல் ரீதியாகப் பெரிதும் முதிர்ச்சியடைந்திருப்பதில்லை.

இவர்களின் கருப்பை வளர்ச்சி, இடுப்பு என்பனவும் கர்ப்பத்தைக் காக்கும் தகவு அற்றதாகவும் பிரசவத்துக்கு ஏற்புடையதல்லதாகவும் காணப்படுகிறது.

இதனால் இவர்களுக்குப் பொதுவாக மருத்துவக் கருவிகளைப் பயன்படுத்தியே பிரசவிக்க வேண்டிய தேவைப்பாடு ஏற்படுகிறது. இதனால் தாய்க்கும் சேய்க்கும் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். அத்துடன், இவர்கள் பிரசவத்துக்கு ஒத்துழைக்கும் தன்மையும் மிகக் குறைவாகவே யுள்ளது.

இவை மட்டுமல்லாது இவர்களின் மனநிலை ஒத்துழைப்பின்றிய தன்மைகளினாலும் போசாக்குக் குறைபாடுகள் காணப்படுவதாலும் [வேண்டாத கர்ப்பம்,கர்ப்பம் பற்றிய போதிய அறிவின்மை] இவர்கள் ஆரோக்கியமான குழந்தைகளைப் பிரசவிக்கத் தவறுகின்றார்கள். அத்துடன், கர்ப்பவதிகள் [கிளினிக்] பிணி ஆய்வுநிலையத்துக் கிரமமாகச் செல்லாது விடுவதாலும் அங்கு வழங்கப்படும் போஷாக்கு மாத்திரைகளை உட்கொள்ளாது விடுவதாலும் வைத்திய ஆலோசனையைச் செவிமடுக்கவும் தவறுவதால் இவர்களின் குழந்தைகளின் நலம் பாதிப்படைய சாத்தியக் கூறுகள் மேலும் அதிகமாக உள்ளன.

இந்தச் செயற்பாடுகளால் குறைப் பிரசவங்களுக்கும் காலம் தவறிய பிரசவங்களுக்கும் சந்தர்ப்பங்கள் அதிகரிக்கின்றன. தவிர, இவர்கள் தாயாகும் போது மேலும் சில சிக்கல்கள் ஏற்பட சந்தர்ப்பம் அதிகமாகவுள்ளது. அதாவது குருதி சார் உபாதைகள் (P.P.H.PIH) சிறுநீர்த் தொற்று, அமையம் தவறிய கருத்தங்கல் (Ectopic Pregnancy), அதிபர வாந்தி (Hyperenisis gravidarum) என்பனவாகும்.



அத்துடன், இவர்கள் கருப்பை புற்று நோய்க்கு ஆளாகவும் சாத்தியக்கூறுகள் உள்ளன. மற்றும் யௌவனப் பருவத்தில் கர்ப்பம் தரித்தல் ஏற்புடையதல்லாத ஒரு விடயம் என்றே கூறவேண்டியுள்ளது. இவை தவிர,யௌவனப் பருவ கர்ப்பம் தரித்தல்– தவிர்க்கும் முறைகளாலும் குற்றவியல் கருச்சிதைவுகளாலும் (Criminal abortion) – தாய் மரணம் போன்ற பாரதூரமான விளைவுகளுக்கு இட்டுச் செல்லும்.

எமது சமூகத்தில் இந்நிலையை மேலும் வலுவாக்கும் நிகழ்வாகவே அலைபேசிகளின் காணொளி நெடும் தகவல் பரிமாற்றங்கள் அமைகின்றன.

டாக்டர்
வெ.நாகநாதன்

# நீரிழிவு வந்தால் செக்ஸில் பிரச்சினை

இரத்தத்தில் சீனியின் அளவு அதிகமாக இருந்தால் (நீரிழிவு நோய்) செக்ஸில் பிரச்சினை ஏற்படும் என ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது. நீரிழிவு நோய் உள்ளவர்களில் 44 சதவீதம் பேர் செக்ஸ் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த ஆய்வின் முடிவு தெரிவிக்கிறது. இவர்களுக்கு உறுப்பு எழுச்சி இல்லாமை (erectile dysfunction) பிரச்சினை ஏற்படுகிறதாம். உறுப்பு எழுச்சி இல்லாமை காரணமாக ஆண்களால், திருப்திகரமான முறையில் செக்ஸ் உறவில் ஈடுபட முடிவதில்லை. மேலும், சிலருக்கு விந்து வேகமாக வெளியாவதும் ஏற்படுகிறது. இதனால் நீண்ட நேரம் உடலுறவில் ஈடுபட முடியாத நிலையும் ஏற்படுகிறது.



இந்தியாவைச் சேர்ந்த எம்.வி.நீரிழிவு மருத்துவமனை இந்த ஆய்வை மேற்கொண்டுள்ளது. கடந்த ஆண்டு நடந்த இந்த ஆய்வில் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட 423 பேரிடம் ஆய்வு நடத்தப்பட்டது. இவர்களில் 188 பேருக்கு ஈடி என்று சொல்லப்படுகிற உறுப்பு எழுச்சியின்மை பிரச்சினை காணப்பட்டது. 49 சதவீதம் பேருக்கு இது லேசாகவும், 33 சதவீதம் பேருக்கு மிதமாகவும் 18 சதவீதம் பேருக்கு தீவிரமாகவும் இது காணப்பட்டது. மேலும், நீரிழிவு நோயுடன் கூடிய நோயாளிகளில் 37.8 சதவீதம் பேருக்கு முன் கூட்டியே விந்து வெளியாகும் பிரச்சினை இருந்தது. ஆய்வை மேற்கொண்ட குழுவின் தலைவரான டாக்டர் விஜய் விஸ்வநாதன் கூறுகையில், இரத்த விநியோகம் சீரவர இல்லாததே இந்த உறுப்பு எழுச்சியின்மைக்கு முக்கிய காரணம் என்பதையும் கண்டுபிடித்துள்ளோம் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் சிறுகதை

# ஓடிப்போனவர்கள்

ரிஷி

சுபாஸ் மிகவும் உணர்ச்சிவசப்பட்டவனாகக் காணப்பட்டான். அவனுக்கு என்ன பதில் சொல்வது என்பது தெரியாமல் மதனா தலைகுனிந்திருந்தாள்.

'மதனா நான் சொல்வது உங்களுக்கு புரியவில்லையா...? இனியும் நான் பொறுத்திருக்க மாட்டேன். வீட்டில் எனக்குப் பெண் பார்த்துவிட்டனர். நான் எவ்வளவோ மறுத்தபோதும் அப்பா பிடிவாதமாகவிருக்கிறார். பெண்ணின் படத்தைக் காட்டி பார்க்கச் சொன்னார்கள். நான் பார்க்கவில்லை. ஊர், விபரம் எல்லாம் சொன்னார்கள். நான் எதையும் காதில் போடவில்லை. எனக்கு எல்லாமே உங்கள் நினைவுதான். அதனால் தான் சொல்கிறேன் நாம் இருவரும் எங்கேயாவது சென்றுவிடுவோம்'.

சுபாஸுக்குள்ள அதே பிரச்சினைதான் மதனாவுக்கும். அவள் வீட்டிலும் மாப்பிள்ளை பார்த்துவிட்டனர். மதனா மறுத்த போதும் எந்தப் பயனும் ஏற்படவில்லை. உள்ளூர் மாப்பிள்ளைதான், நல்ல உத்தியோகம், நல்ல குடும்பமெனக் கூறி மாப்பிள்ளையின் படத்தையும் மதனாவுக்குக் காட்டினர். ஆனால், மதனாவின் மனதில் சுபாஸ் இருந்ததால் அவள் போட்டோவை வாங்கி அப்படியே மேசை லாச்சியினுள் வைத்துவிட்டாள். இப்போது என்ன செய்வது என்பதைக் கேட்கத்தான் சுபாஸை சந்திக்க வந்தாள். சுபாஸ் ஓடிப் போவோம் என்று சொன்னதுதான் மதனவுக்கு கொஞ்சம் அதிர்ச்சியாகவிருந்தது.

'சுபாஸ் நாம் ஓடிப்போனால் ஊர் உலகத்தில் நம்மைப் பழிக்க மாட்டார்களா? அப்பா, அம்மாவை நினைக்கும் போதுதான் கவலையா இருக்கு' என்று மதனா கூறினாள்.

'அவர்கள் எமது உணர்வைப் புரிந்துகொண்டிருந்தால் நாம் ஏன் இந்த முடிவுக்கு வருகின்றோம். நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன் என்று கூறியபோது அந்தப் பெண் யார்? பெயர் என்ன? ஊர் என்ன என்றாவது கேட்டார்களா? ஒரேயடியாகக் காதலாவது கத்தரிக்காயாவது என்று துள்ளுகிறார்களே. இவுங்களைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்' என சுபாஸ் கேட்டான்.

சுபாஸின் வாதம் மதனாவுக்கும் நியாயமாகவே பட்டதால் அவனின் முடிவுக்கு சம்மதம் தெரிவித்தாள். எங்கே போவது என இருவரும் யோசித்தனர். இருவரின் ஊரும் தொலை தூரங்களில் இருந்தாலும் தமது மாவட்டத்தை விட்டு வேறு மாவட்டத்திற்கு செல்வதெனத் தீர்மானித்தனர். சுபாஸ் நல்ல அரச உத்தியோகத்தில் இருந்ததால் எதிர்காலம் தொடர்பில் மதனா அச்சப்படவில்லை. சுபாஸ் வேலைக்குச் செல்லும் போதும் மதனா தனியார் கம்பனிக்கு வேலைக்குச் செல்லும் போதும் தானே பஸ்ஸில் சந்தித்துக் கொண்டனர்.

மதனா தனது சம்மதத்தை தெரிவித்ததால் சுபாஸ் மகிழ்ச்சியடைந்தான். 'தாங்ஸ் மதனா... எங்கே நீங்கள் மறுத்து விடுவீர்களோ என்று பயந்துவிட்டேன்' எனக் கூறிய சுபாஸ், 'வரும் வெள்ளிக்கிழமை நீங்கள் வேலைக்கு போவது போல் வாருங்கள் கொஞ்ச உடுபுடவைகள் மட்டும் எடுத்து வாருங்கள். வவுனியாவிலுள்ள எனது நண்பன் சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளான். நாம் அங்கு சென்று வாழுவோம்' என்று கூறினான். மதனாவும் தலையசைத்துவிட்டு இருவரும் பிரிந்து சென்றனர்.





சுபாஸ் குறிப்பிட்டது போல் வெள்ளிக்கிழமையும் வந்தது. இருவரும் வவுனியாவிற்கு சென்றுவிட்டனர். இரவு வரை சுபாஸ் வீட்டில் அவனை யாரும் தேடவில்லை. ஆனால், நீண்ட நேரமாகியும் அவன் வராததால் பெற்றோரும் உறவினர்களும் தேடத் தொடங்கினர். இதே போன்றே மதனா வீட்டிலும் அவளைக் காணவில்லையென ஊர் முழுவதும் தேடினர். இறுதியில் மதனா யாரோ ஒரு இளைஞனுடன் பஸ்ஸில் ஏறிச் சென்றதைக் கண்டதாகச் சிலர் கூறினர். இதனால் துவண்டு போன மதனாவின் பெற்றோர் நல்லதொரு மாப்பிள்ளையைப் பார்த்து வைத்திருந்தும் இப்படிச் செய்துவிட்டாளே என்று தலையிலடித்துக் கதறினர்.

சுபாஸ் வீட்டிலும் இதே கதைதான். நாங்கள் நல்ல வடிவான பொம்பிளையாகத் தானே பார்த்தோம். இவன் ஏன் இப்படிச் செய்தான். நாங்கள் பொம்பிளை வீட்டுக்கு என்ன பதிலைச் சொல்வது என்று சுபாஸின் பெற்றோரும் கதறினர்.

இரு தினங்கள் கழிந்த நிலையில் மதனாவின் வீட்டுக்கு மாப்பிள்ளை வீட்டார் வந்தனர். மதனாவின் பெற்றோருக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. தடுமாறிக் கொண்டிருந்த போதே மாப்பிள்ளையின் அப்பா எங்களை மன்னித்துவிடுங்கள். எங்கள் மகன் யாரோ ஒரு ஓடுகாலியுடன் ஓடிவிட்டான். நாங்கள் இதைக் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. எங்களை மன்னித்துவிடுங்கள்' எனக் குரல் தளுதளுக்க கூறினார்.

இதனைச் சற்றும் எதிர்பாராத மதனாவின் பெற்றோரும் 'நாங்கள் இதை எப்படி உங்களிடம் சொல்வதெனத் தடுமாறிக் கொண்டிருக்கிறோம். எங்கள் மகளும் யாரோ ஒருவனுடன் ஓடிவிட்டாள்' எனக்கூறி கண்ணீர் விட்டனர். 'எங்கள் மகன் சுபாஸ் இப்படிச் செய்வான் என நான் கனவிலும் நினைக்கவில்லையென' சுபாஸின் தாயார் கூற, எங்கள் மகள் மதனாவும் இப்படிச் செய்வாளென தான் நினைக்கவில்லையென மதனாவின் தாயார் கூற இருவரும் ஒருவரையொருவர் தேற்றிக் கொண்டிருந்தனர்.

ஆனால், தம் இருவருக்கும் தான் தமது பெற்றோர் கல்யாணம் நிச்சயம் பண்ணினார்களென்பதை தெரியாத சுபாஸும் மதனாவும் ஓடிப்போய் விட்டார்கள்.

•

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
'Saturday மெயில் சிறுகதை'
இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# தொழில் பார்க்கும் பெண்களின் செலவு; கணவர்களுக்கு உண்மை தெரிவதில்லை

உத்தியோகம் பார்க்கும் பெண்கள் கடைகளில் பொருட்களை வாங்கும் போது தாங்கள் செலவு செய்யும் பணம் குறித்து உண்மையான விபரத்தை கணவன்மாருக்கு சொல்வதில்லை என்று லண்டனில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் கண்டறியப்பட்டிருக்கிறது.

Marie Claire என்ற சஞ்சிகையின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்த ஆய்வின் முடிவுகள் இவ்வாறம் Daily Mail பத்திரிகையின் செவ்வாய்க் கிழமை இதழில் வெளியிடப்பட்டிருக்கின்றன.

20 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட சுமார் 1500 பெண்களிடம் 'உங்கள் செலவினங்களை வாழ்க்கைத் துணைவருக்கு மறைக்கிறீர்களா அல்லது பொய்யான தகவல்களைக் கூறுகிறீர்களா' என்று ஆய்வின் போது கேட்கப்பட்டது;

தங்களின் தேவைக்காக செலவிடும் பணம் குறித்து உண்மையை தாங்கள் கணவன் மாருக்கு மறைத்து விடுவதை உத்தியோகம் பார்க்கும் பெண்களில் அரை வாசிப் பேர் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தாங்கள் வாங்கும் ஆடைகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் பற்றி கணவன்மாருக்கு கூறாமல் மறைத்து விடுவதாக ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பெண்களில் 40 சதவீதமானவர்கள் கூறியிருக்கிறார்கள்.

உத்தியோகம் பார்க்கும் பெண்கள் வாங்கும் ஆடைகள், காலணிகள் மற்றும் கைப்பைகளில் சுமார் 80 சதவீதமானவைபற்றி கணவன்மாருக்கு தெரியவருவதில்லை என்று ஆய்வில் கண்டறியப்பட்டிருக்கிறது.

தற்போதைய சர்வதேச பொருளாதார மந்தநிலை உத்தியோகம் பார்க்கும் பெண்கள் மத்தியில் செலவுகளை கணவர்மாருக்கு மறைக்கும் போக்கை மேலும் அதிகப் படுத்தியிருப்பதாக Marie Claire சஞ்சிகையின் பிரதம ஆசிரியரான திரிஷ் ஹால்பின் கூறியிருக்கிறார்.

# மனைவி கிடைக்காத நிலையில் 2.5 கோடி சீன இளைஞர்கள்

மக்கள் தொகை பெருக்கத்தைக் கட்டுப் படுத்த சீனாவில் குடும்பக் கட்டுப்பாடு சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படுகிறது. ஒரு தம்பதிக்கு ஒரு குழந்தை என்ற திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளது. இது இப்படியிருக்க அங்கு கிராமப்புறங்களில் தங்களின் வாரிசாக ஆண் குழந்தை மட்டும் இருந்தால் போதும் பெண் குழந்தைகள் வேண்டாம் என்ற மனநிலை ஏற்பட்டுள்ளது. இதன் எதிரொலியாக பெண் குழந்தைகளை அவர்கள் கருவிலேயே அழித்து வருகின்றனர். இதற்கு வசதியாக அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் சென்டர்கள் அதிக அளவில் உள்ளன. பெண் குழந்தைகளைக் கருவிலேயே அழிக்கும் கொடுமை கடந்த 1980 ஆம் ஆண்டில் இருந்தே நடந்து வருகிறது.

ஒவ்வொரு குடும்பத்திலும் ஆண் குழந்தைகள் மட்டுமே இருப்பதால் திருமணத்துக்கு பெண் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கிராமப்புறங்களில் அதிக அளவில் தட்டுப்பாடு நிலவுகிறது. கடந்த 1980 ஆம் ஆண்டுகளில் 103 முதல் 107 ஆண் குழந்தைகள் பிறந்ததால் 100 பெண் குழந்தைகளே பிறந்தன. பெண் குழந்தைகள் பிறப்பு விகிதம் ஆண்டுதோறும் குறைந்து கொண்டே வருகிறது. கடந்த 2006 ஆம் ஆண்டில் எடுத்த கணக்கெடுப்பின் படி 121 ஆண் குழந்தைகளுக்கு இணையாக 100 பெண் குழந்தைகளே பிறப்பது தெரியவந்தது. இதே நிலை நீடித்தால் 2020 ஆம் ஆண்டில் அதாவது இன்னும் 10 ஆண்டுகளில் 2 கோடியே 40 இலட்சம் இளைஞர்களுக்கு மனைவிக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது. இதனால் நாட்டில் செக்ஸ் குற்றங்கள் போன்றவை நடக்கும் என அரசு அச்சப் படுகிறது. எனவே கருவில் இருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதைக் கண்டறியும் ஸ்கேன் சோதனைக்கு சீனா தடை விதித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடி ஆட்டத்துக்கு அத்திபாரம்






ஒருநாள் போட்டிகளில் விறுவிறுப்பை அதிகரிக்க சர்வதேச கிரிக்கெட்சபை (ஐ.சி.சி.) கொண்டுவந்த அதிரடி மாற்றங்களில் ஒன்றுதான் 'பவர் பிளே'. இந்த மாற்றத்தால் ஒரு நாள் போட்டிகளில் மக்களுக்கு ஆர்வம் அதிகரிக்கத் தொடங்கியது. 'துடுப்பாட்ட பவர் பிளே' ஓவர்களில் அதிவிரைவாக ஓட்டமெடுக்கும்போது, போட்டியின் நிலைமை தலைகீழாக மாறிவிடுகிறது. இந்த 'பவர் பிளே' குறித்து பார்ப்போம்.

ஆரம்பகாலத்தில் ஒருநாள் போட்டிகளில் விக்கெட் காப்பாளர் உட்பட அனைத்து வீரர்களையும் களத்தடுப்புச் செய்யஎல்லைக்கோட்டுக்கு அருகே கூட நிறுத்தலாம். இதனால், துடுப்பாட்டக்காரர்கள் ஓட்டங்கள் குவிப்பது சிரமமாகிவிடும். போட்டிகளில் விறுவிறுப்பை அதிகரிக்க நினைத்த சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) களத்தடுப்பில் சில கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்தது.

## 'பவர் பிளே'யில் மாற்றம்

அதாவது, முதல் 15 ஓவர்களில் 9 களத்தடுப்பாளர்கள் ஆடுகளத்தைச் சுற்றியுள்ள 27 மீற்றர் தூர வட்டத்துக்குள்தான் நிற்கவேண்டும். 2 களத்தடுப்பாளர்கள் இந்த வட்டத்துக்கு வெளியே நிற்கலாம். இதன் மூலம் துடுப்பாட்ட வீரர்கள் அதிக பவுண்டரிகள் , சிக்ஸர்கள் அடிக்க முடியும்.

**ஜெயசூரியா எழுச்சி:** முதலாக 1996 இல் நடந்த உலகக் கிண்ணத் தொடரில் இந்தக் கட்டுப்பாடுகள் அறிமுகம் செய்யப்பட்டது. இதைச் சரியாகப் பயன்படுத்திய இலங்கை அணியின் தொடக்க ஆட்டக்காரர்களான ஜெயசூரியாவும் , களுவிதாரணவும் (முதல் 15 ஓவர்) அதிரடியாக ஓட்டங்களைக் குவித்து ரசிகர்களை மகிழ்வித்தனர். தவிர, இந்த அதிரடிதான் இலங்கை அணிக்கு உலகக் கிண்ணத்தை (1996 இல்) பெற்றுத்தந்தது.

**'பவர் பிளே' விதிகள்:** தொடர்ந்து இது ரசிகர்களிடம் எதிர்பார்ப்பை அதிகரிக்க மேலும் சில மாற்றங்களை ஐ.சி.சி. கொண்டுவந்தது. இதன்படி 'பவர் பிளே' விதிகள் கொண்டுவரப்பட்டன. இது 'பவர் பிளே-1' (முதல் 10 ஓவர்கள் கட்டாயம்), 'பவர் பிளே-2' (5 ஓவர்கள்), 'பவர் பிளே-3' (5 ஓவர்கள் ) என அழைக்கப்பட்டது.

**தேர்வு முறை:** களத்தடுப்புச் செய்யும் அணியின் கப்டன் போட்டியின் தன்மைக்கேற்ப இந்த இரண்டு, மூன்றாவது 'பவர் பிளே'யைத் தேர்வு செய்து கொள்ளலாம். அப்போது 3 களத்தடுப்பாளர்கள் உள்வட்டத்துக்கு வெளியே நிற்கவேண்டும். இந்த விதிமுறை 2005 ஜூலை 7 இல் அவுஸ்திரேலியா-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டி அறிமுகம் செய்யப்பட்டது.

**'துடுப்பாட்ட பவர் பிளே':** பின் இதிலும் மாற்றம் செய்யப்பட்டது. அதாவது, மூன்றாவது 'பவர் பிளே' யைத் தேர்வு செய்யும்உரிமைதுடுப்பெடுத்தாடும் அணிக்குக் கொடுக்கப்பட்டது. இது 'துடுப்பாட்ட பவர் பிளே' என்றழைக்கப்பட்டது.

2008 இல் நடந்த நியூஸிலாந்து - பங்களாதேஷ் அணிகள் பங்கேற்ற ஒருநாள் தொடரில் இது நடைமுறைப்படுத்தப்பட்டது. இப்போது வரை இதுதான் நடைமுறையிலிருந்து வருகிறது.

**மந்த நிலை:** இதனால், ஒரு நாள்போட்டியில்முதல் 15 ஓவர்கள் மற்றும் துடுப்பாட்ட பவர் பிளேயின் போது விறுவிறுப்பு அதிகமாகவுள்ளது. இடையில் 20 முதல் 40 வரையிலான ஓவர்களில் மந்த நிலை காணப்படுகிறது. இதையடுத்து, இதிலும் மாற்றம் கொண்டுவர ஐ.சி.சி. முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

**தற்போதைய முறை:** தற்போது, முதல் 10 ஓவர்கள் கட்டாய 'பவர் பிளே' முடிந்த பிறகு உடனடியாகக் களத்தடுப்புச் செய்வோர் இரண்டாவது 'பவர் பிளே' யை பயன்படுத்துகிறார்கள். துடுப்பாட்டம் செய்வோர் கடைசி 10 ஓவர்களில் தான் பெரும்பாலும் 'பவர் பிளே'யை பயன்படுத்துகின்றனர்.

**இதில் ஐ.சி.சி. செய்ய விரும்பும் மாற்றம்:** முதல் 'பவர் பிளே' முடிந்த பின் அடுத்த 'பவர் பிளே' எடுப்பதில் கட்டாய நிலை கொண்டுவரப்படும். அதாவது, குறிப்பிட்ட ஓவர்கள் இடைவெளியில் தான் 'பவர் பிளே' எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் களத்தடுப்புச் செய்யும் அணியினருக்கு ஏற்படும்.

★ வழக்கமாக கடைசி 10 ஓவர்களில் எந்த அணியுமே அடித்து விளையாடுவதால் போட்டியில் விறுவிறுப்பு இருக்கும். இதனால், இந்த ஓவர்களில் துடுப்பாட்டம் செய்வோர் 'பவர் பிளே' எடுப்பதற்குக் கட்டுப்பாடு கொண்டுவரப்படும்.

★ அநேகமாகக் களத்தடுப்பு, துடுப்பாட்ட 'பவர்பிளே' க்கள் 20 முதல் 40 ஓவர்கள் இடைவெளியில் பயன்படுத்த வேண்டியிருக்கும். இந்த மாற்றங்கள் விரைவில் நடைமுறைக்கு வரலாம் எனத் தெரிகிறது.

**'ருவென்ரி-20' யில் அறிமுகம்:** சமீபத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள 'ருவென்ரி-20' போட்டிகளில் இந்தமுறை நடைமுறையிலுள்ளது. இதில் முதல் ஆறு ஓவர்கள் கட்டாய 'பவர் பிளே' உண்டு. அவ்வளவுதான். மற்றப்படி களத்தடுப்பு, துடுப்பாட்ட 'பவர் பிளே' இல்லை. இது தவிர, உலகளவில் கிரிக்கெட் ரசிகர்களை கட்டிப்போடும் இந்தியாவின் ஐ.பி.எல். தொடரிலும் 'பவர் பிளே' நடைமுறையிலுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மினி திருவிழா ஆரம்பம்

## 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணப் போட்டியில் 16 அணிகள் களத்தில்

ஐ.சி.சி. 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நியூஸிலாந்தில் நேற்றுத் தொடங்கியது. நடப்புச் சாம்பியன் அந்தஸ்துடன் களமிறங்கும் இளம் இந்திய அணி நேற்றைய முதல் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணியைச் சந்தித்தது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) சார்பில் 19 வயதுக்குட்பட்டோருக்கான எட்டாவது உலகக் கிண்ண (50 ஓவர்) கிரிக்கெட் தொடர் நியூஸிலாந்தில் தொடங்கியது. இதில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட 16 அணிகள் பங்கேற்கின்றன.

முதற்கட்டமாக இந்த 16 அணிகள் 'ஏ', 'பி', 'சி', 'டி' என நான்கு பிரிவுகளாக (தலா 4) பிரிக்கப்பட்டு லீக் சுற்றில் மோதுகின்றன. லீக் சுற்றின் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதலிரண்டு இடங்களைப் பெறும் அணிகள் காலிறுதிக்கு முன்னேறும். காலிறுதியில் வெற்றிபெறும் அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெறும். இதில் வெற்றி பெறும் அணிகள் 30 ஆம் திகதி நடக்கும் இறுதியாட்டத்தில் விளையாடும்.

**இலகுவான பிரிவு:**

இத்தொடரில் இலங்கை, இந்திய அணிகள் இலகுவான பிரிவில் இடம்பெற்றுள்ளன.

'ஏ' பிரிவில் இந்தியா, ஆப்கானிஸ்தான், இங்கிலாந்து மற்றும் ஹொங்கொங் அணிகள் உள்ளன.

'பி' பிரிவில் தென்னாபிரிக்கா, அயர்லாந்து, அவுஸ்திரேலியா, அமெரிக்கா அணிகள் உள்ளன.

'சி' பிரிவில் இலங்கை, சிம்பாப்வே, கனடா, நியூஸிலாந்து அணிகள் இடம்பெற்றுள்ளன.

'டி' பிரிவில் பாகிஸ்தான், மேற்கிந்தியா, பங்களாதேஷ், பப்புவா, நியூ கினியா அணிகள் உள்ளன.

'ஏ' பிரிவில் இந்திய அணி நேற்றைய முதல் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணியைச் சந்தித்தது.

**48 போட்டிகள்:**

இத்தொடரில் லீக் சுற்று, காலிறுதி, அரையிறுதி மற்றும் இறுதியாட்டமென மொத்தம் 48 போட்டிகள் நடக்கிறது. காலிறுதிப் போட்டிகள் எதிர்வரும் 23,29,30 ஆம் திகதிகளில் நடக்கிறது. அரையிறுதிப் போட்டி எதிர்வரும் 25,27 ஆம் திகதிகளில் நடக்கிறது. இத்தொடரின் இறுதியாட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி லின்கானில் நடக்கிறது.

இது தவிர, 9 முதல் 16 வரையிலான இடங்களை நிர்ணயிக்கும் போட்டிகளும் நடக்கிறது.

**நடப்புச் சாம்பியன்:**

2007/08 ஆம் ஆண்டு மலேசியாவில் நடந்த இத்தொடரில் விராத் கோஹ்லி தலைமையிலான இளம் இந்திய அணி கிண்ணத்தை வென்று சாதித்தது. இம்முறை அசோக் மெனாரியா தலைமையில் களமிறங்கும் இளம் இந்திய அணி நடப்புச் சாம்பியன் அந்தஸ்தைத் தக்கவைத்துக் கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. இம்முறை இந்திய அணி கிண்ணத்தை வெல்லும் பட்சத்தில் இத்தொடரில் அதிக முறை கிண்ணத்தை வென்ற அணிகள் வரிசையில் முதலிடம் பிடிக்கும்.

தற்போது இந்தியா (1999/2000, 2007/08), பாகிஸ்தான் (2003/04, 2005/06), அவுஸ்திரேலியா (1978/88, 2001/02) அணிகள் தலா இரண்டு முறை கிண்ணத்தை வென்றுள்ளன. இங்கிலாந்து அணி (1997/98) ஒரே ஒரு முறை கிண்ணத்தை வென்றுள்ளது. தவிர தொடர்ந்து இரண்டு முறை கிண்ணத்தை வென்ற இரண்டாவது அணி என்ற பெருமை பெறும். முன்னதாக பாகிஸ்தான் அணி இச்சாதனை படைத்திருந்தது.

இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா உள்ளிட்ட முன்னணி அணிகள் இடம்பெற்றுள்ளதால் இத்தொடர் சவால் நிறைந்ததாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.



# ஆஸியின் நம்பிக்கை நட்சத்திரம்

அவுஸ்திரேலியப் பெண்கள் டெனிஸின் நம்பிக்கை நட்சத்திரமாக உருவெடுத்துள்ளார் இளம் சமந்தா ஸ்டோசர் (25 வயது). கிராண்ட்ஸ்லாம் தொடரான பிரெஞ்ச் ஓப்பன் ஒற்றையர் பிரிவில் (2009) மட்டும் அரையிறுதி வரை முன்னேறியுள்ளார். இதுதான் இவரது சாதனை. மற்றப்படி இரட்டையர் போட்டிகளில் யு.எஸ். ஓப்பன் (2005), பிரெஞ்ச் ஓப்பன் (2006) பட்டங்கள் வென்றுள்ளார். அவுஸ்திரேலிய ஓப்பன் (2006), விம்பிள்டன் (2008,2009) தொடர்களில் இறுதியாட்டத்துக்கு முன்னேறி அசத்தியுள்ளார்.

இந்நிலையில், கடந்த ஆண்டு ஒற்றையர் போட்டிகளில் இவருக்குக் குறிப்பிடத்தக்க ஆண்டாக அமைந்தது. மாட்ரிட், டுபாய் டெனிஸ் தொடர்களில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். மியாமி, டொரண்டோ தொடரில் காலிறுதிக்குள் நுழைந்தார்.

தற்போது தரவரிசையில் 13 ஆவது இடத்திலுள்ள இவர் இந்த ஆண்டு ஒற்றையர் போட்டிகளில் மட்டும் கவனஞ்செலுத்த முடிவு செய்துள்ளார். இன்று தொடங்கும் அவுஸ்திரேலிய ஓப்பனைச் சொந்த மண்ணில் நம்பிக்கையுடன் எதிர்கொள்ளவிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்;

'டெனிஸ் தரவரிசையில் தற்போது 'முதல் -15' இடத்துக்குள் நுழைந்துள்ளேன். அவுஸ்திரேலிய ஓப்பன் டெனிஸ் தொடரில் ஒவ்வொரு கேமிலும் வெற்றிபெற முயற்சிப்பேன். தோல்வியடையும் போட்டிகளை விட வெற்றி பெறும் ஆட்டங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முயற்சிப்பேன்' என்றார்.

**முதலிடத்தில் சமந்தா:**

இந்நிலையில், டெனிஸ் பத்திரிகையாளர்கள் இணையத்தள வாசகர்கள் சார்பில் ஒரு கருத்துக் கணிப்பு நடந்தது. இதில் கடந்த ஆண்டு அதிக முன்னேற்றம் கண்ட வீராங்கனை பட்டியலில் 53.9 சதவீத வாக்குகளைப் பெற்று சமந்தா ஸ்டோசர் முதலிடத்தைப் பிடித்து அசத்தியுள்ளார். இவருக்கு அடுத்தடுத்த இடங்களில் ஜேர்மனியின் சபைன் லிசிக்கி (27.5%), அவுஸ்திரேலியாவின் ஜெலீனா டோகிச் [illegible] அரவானே ரேசாய் (6.7%) உள்ளனர்.

**செரினா முன்னணியில்:**

கடந்த ஆண்டின் சிறந்த வீராங்கனையாக அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் 46.1 சதவீத வாக்குகளைப் பெற்று முன்னணியிலுள்ளார். இரண்டாவது இடத்தை (36%) பெல்ஜியத்தின் கிம் கிளைஸ்டர்ஸ் பெற்றுள்ளார்.

அடுத்த மூன்று இடங்களை ரஷ்யாவின் தினரா சபினா (7.9%), டென்மார்க் கின் கரோலின் வோஸ்னியாக்கி (5.6%), ரஷ்யாவின் ஸ்வெட்லனா கஸ்னெட்சோவா (3.9%) பிடித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சி மோகத்தால் தொலையும் ஆயுட்காலம் அவுஸ்திரேலிய ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

நாளாந்தம் பல மணிநேரம் தொலைக்காட்சி பெட்டியின் முன்னால் அமர்ந்திருப்பவர்களின் ஆயுட்காலம் குறைவடைவதாக அதிர்ச்சிகரமான தகவலை ஆய்வொன்று வெளியிட்டுள்ளது.

தொழில்நுட்பத்தின் அபார வளர்ச்சி உலகெங்கிலுமிருந்து ஒளிபரப்பாகும் அலைவரிசைகளை நம்வீட்டு தொலைக்காட்சிக்குள் [ரி.வி] கொண்டு வந்திருப்பதனால் ஐந்திலிருந்து அறுபது வரை வயது வித்தியாசமின்றி ரி.வி.யின் முன் தவம்கிடப்பதே நம்மவர்களின் வழக்கமாகிவிட்டது.

இதில் சுவாரஸ்யம் என்னவென்றால் தென்னிந்திய நாடகங்களின் ஆக்கிரமிப்பால் வீட்டுவேலைகள் அனைத்தையும் துரித கதியில் இயந்திரம் போன்று ஒரு சிலமணி நேரத்திற்கு முடித்துவிடும் நம்மூர் இல்லத்தரசிகள் நாடகங்களில் மூழ்கி விடுகின்றனர்.

அதுமட்டுமன்றி நாடகங்களில் வரும் கதாப்பாத்திரங்களின் உணர்வுகள் [மகிழ்ச்சியோ, கவலையோ] அனைத்தும் இவர்களில் பிரதிபலிக்கும் அளவுக்கு ரி.வி.யில் லயித்து விடுகின்றனர்.

இந்நிலையிலேயே ரி.வி.க்கு முன்பாகச் செலவிடும் ஒவ்வொரு மணி நேரமும் அவர்களின் ஆயுட்காலத்தைக் குறைப்பதாக அதிர்ச்சிகரமான தகவல் வெளியாகியுள்ளது.

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரிலுள்ள இருதய மற்றும் நீரிழிவு தொடர்பான நோய்களை ஆராயும் நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்களே இத் தகவலை வெளியிட்டுள்ளனர்.

தொலைக்காட்சியின் முன்னால் பலமணி நேரங்களைச் செலவிடுபவர்களுக்கு முன்னதாகவே மரணம் ஏற்படுவதற்கான அபாயம் 18 வீதத்தால் அதிகரித்திருப்பதாக இவ் ஆய்வு தெரிவிக்கின்றது.

ரி.வி.யின் முன்னால் செலவிடும் ஒவ்வொரு மணிநேரமும் ஆரோக்கியமான மனிதர்களுக்குக் கூட இருதய நோய் ஏற்படும் வாய்ப்பை 18 வீதத்தால் அதிகரித்துள்ளதுடன், புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பை 9 வீதத்தால் அதிகரித்துள்ளது.

எனினும் ரி.வி.யின் முன்னால் அமர்ந்திருப்பது மட்டும் மரணத்தை வரவழைப்பதில்லை. எந்த வேலையையும் செய்யாமல் பல மணி நேரம் ஓரிடத்தில் அமர்ந்திருப்பதன் மூலமும் இவ்வாறான மரணங்கள் ஏற்படுவதாக இவ் ஆய்வுக்குத் தலைமை தாங்கிய பேராசிரியர் டேவிட் டன்ஸ்ரன் கூறுகிறார்.

கணினியின் முன் நீண்ட நேரம் அமர்ந்திருப்பதும் உடல் நலத்திற்குக் கேடு விளைவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள போதும் நித்திரைக்கு அப்பால் வீடுகளில் ஓய்வாக இருக்கும் நேரங்களின் பிரதான பொழுதுபோக்கு அம்சமாக ரி.வி.யே இருப்பதனால் இவ் ஆய்வு ரி.வி. பார்த்தலை மையப்படுத்தியே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஓரிடத்தில் நீண்ட நேரம் இருப்பதைத் தவிர்த்து நகருவதற்கேற்றவாறு மனித உடல் படைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தொழில்நுட்பம், சமூக மற்றும் பொருளாதார மாற்றங்கள் எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு மக்கள் நகராமல் இருப்பதற்கு உதவி புரிந்துள்ளது எனக் கூறும் பேராசிரியர் டேவிட், பெரும்பாலான மக்கள் கதிரைக்கு கதிரையும் கதிரையிலிருந்து–காருக்கும் காரிலிருந்து கதிரைக்கும் மாறுவதையே நாளாந்த செயற்பாடாக கொண்டிருப்பதாகவும் கூறுகிறார்.

25 வயதுக்கு மேற்பட்ட 8800 ஆண்களும் பெண்களும் இவ் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

நாளொன்றுக்கு இரண்டு மணி நேரம் ரி.வி.பார்ப்போர், 2–4 மணி நேரம் பார்ப்போர், நான்கு மணி நேரத்திற்கும் அதிகமாகப் பார்ப்போரென மூன்று குழுக்களாகப் பிரித்து இவ் ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

இரு மணி நேரத்திற்கும் குறைவாக ரி.வி. பார்ப்பவர்களை விட நான்கு மணி நேரத்திற்கும் அதிகமாக ரி.வி. பார்ப்பவர்களுக்கு விரைவில் மரணம் ஏற்படுவதற்கான வாய்ப்பு 46 வீதத்தால் அதிகரித்திருப்பது இவ் ஆய்வில் தெரியவந்துள்ளது.

ஆரோக்கியமானவர்கள் கூட நீண்ட நேரம் ஓரிடத்தில் அமர்ந்திருந்தால் அவர்களை நீரிழிவு மற்றும் கொலஸ்ரோல் போன்ற நோய்கள் தாக்கும் அபாயம் அதிகமிருப்பதாக டேவிட் கூறுகிறார்.

தூங்கும் போது செலவிடப்படும் அதேயளவு கலோரிப் பெறுமானம் ஓரிடத்தில் உட்கார்ந்திருக்கும் போதும் செலவிடப்படுவதாகத் தெரிவிக்கும் டாக்டர் டேவிட், நான்கு மணிநேரம் ஓரிடத்திலேயே உட்கார்ந்திருப்பதன் மூலம் விரைவில் மரணத்தை அரவணைக்க நேரிடுமெனவும் எச்சரித்துள்ளார்.

எனவே நீண்டகாலம் உயிர் வாழ விருப்பமா? உடற்பயிற்சியைத் தொடருங்கள், நீண்ட நேரம் ஓரிடத்தில் இருப்பதைத் தவிருங்கள், அடிக்கடி அங்குமிங்கும் நடவுங்கள் என ஆலோசனை கூறுகிறது இவ் ஆய்வுக் குழு.




# கூகுள் இணைய சேவையை சீனாவில் இடைநிறுத்தத் திட்டம்

**பெய்ஜிங்:** *சீன மனித உரிமை ஆர்வலர்களின் ஈ-மெயில்களுக்குள் சிலர் சட்டவிரோதமான முறையில் ஊடுருவியதைத் தொடர்ந்து சீனாவுக்கான கூகுள் இணைய சேவைகள் அனைத்தையும் இடைநிறுத்தவுள்ளதாக கூகுள் நிறுவனம் அறிவித்துள்ளது.*

*சீனாவில் சேவையிலுள்ள கூகுள் கட்டமைப்புக்குள் ஊடுருவி ஈ-மெயில் கணக்குகளிலுள்ள தகவல்களை அபகரித்துள்ளமை குறித்து கூகுள் நிறுவனம் கண்டறிந்துள்ளது. ஆனால் இவ்விவகாரத்தில் சீன அரசை நேரடியாக குற்றம் சுமத்தாத கூகுள் சீனாவில் தமது இணைய சேவைகளை நிறுத்துவது நீண்டகால எண்ணம் இல்லையெனவும் குறிப்பிட்டுள்ளது.*

*ஆனாலும் 2006 இல் சீனாவில் உருவாக்கப்பட்ட கூகுள் இணைய சேவைகளை இடைநிறுத்துவதென்ற தீர்மானத்தையே கூகுள் மேற்கொண்டுள்ளது,*

*கூகுள் இணையத் தளத்துக்குள் ஊடுருவியமையை மிகவும் வன்மையாகக் கண்டித்துள்ள அமெரிக்க வெளிவிவகாரச் செயலர் ஹிலாரி கிளின்டன், இவ்விடயம் குறித்துக் கூடிய அக்கறை செலுத்த வேண்டுமெனவும் சீனா இதற்குரிய தகுந்த விளக்கமளிக்கவேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.*

**பி.பி.சி.**



இந்திய இராணுவம் ஸ்தாபிக்கப்பட்டு 62 ஆண்டுகள் நிறைவுக் கொண்டாட்டங்கள் புதுடில்லியில் நடைபெற்றபோது கோபுர வடிவில் இராணுவத்தினர் தோன்றியதைக் காண்கிறீர்கள்.

# உலகின் மிகப்பெரிய விமான நிலையம்

*உலகின் மிகப்பெரிய விமான நிலையமொன்றை திபெத்தில் நிர்மாணிப்பதற்கு சீன அரசு திட்டமிட்டுள்ளது.*

*சீனாவின் அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்பு சபையின் தலைவர் கஸுஜிஆன் இப்புதிய விமான நிலையம் குறித்து தெரிவிக்கையில்;*

*இவ்விமான நிலையத்தினை அமைப்பதற்குரிய இடத்தினைத் தெரிவு செய்யும் பணிகள் நடைபெற்றுவருவதுடன், விமான நிலைய நிர்மாணத்திட்டத்தில் திபெத்தின் அபிவிருத்தித்திட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது.*

*2011 ஆம் ஆண்டில் இவ்விமான நிலையத்தின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், 3 வருடகாலப் பகுதியில் நிர்மாண வேலைகளும் பூர்த்தி செய்யப்படும். 263 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் இந்த விமான நிலையம் அமைக்கப்படவுள்ளது.*

*திபெத்தில் அமைக்கப்படும் ஆறாவது விமான நிலையமான இவ்விமான நிலையத்துக்கு நாகு டக்ரிங் விமான நிலையமெனப் பெயரிடப்படுமெனத் தெரிவித்தார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் [illegible]
மாநகர சபை, யாழ்ப்பாணம்

# காலநிலை மாற்ற அகதிகள்



போர், பட்டினி மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்படுகின்ற மக்கள் அகதிகளாக இடம்பெயர்கின்ற தோற்றப்பாடு உலகின் பல பிராந்தியங்களிலும் காணப்படுகின்ற ஒன்றாகும். உலகின் அகதிகளில் பெருமளவானவர்கள் வறிய மூன்றாம் உலக நாடுகளிலேயே இருக்கிறார்கள். இவர்களில் பல இலட்சம் பேர் பல தசாப்தங்களாக அகதி முகாம்களில் வாழ்கிறார்கள்.

அபிவிருத்தியடைந்த நாடுகள் மத்தியில் அமெரிக்கா, சுவீடன் மற்றும் பின்லாந்து போன்றவை இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் தற்காலிக புகலிடம் அளித்திருக்கின்றன. டென்மார்க் 2001 - 2006 காலகட்டத்தில் ஆப்கானிஸ்தானில் கொடிய வரட்சியினால் பாதிக்கப்பட்டவர்களில் ஆயிரக்கணக்கானவர்களுக்கு புகலிடம் அளித்திருக்கிறது.

தற்போது காலநிலை மாற்றத்தின் விளைவான அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு புதியவகையான அகதிகள் தோன்றப்போகிறார்கள் என்று அஞ்சப்படுகிறது.

21 ஆம் நூற்றாண்டில் மனித குலம் எதிர்நோக்கும் சவால்களில் பாரதூரமானவை காலநிலை மாற்றத்தின் விளைவான அனர்த்தங்களேயாகும். பூமி வெப்பமடைவதைத் தடுப்பதற்கான வழிவகைகள் குறித்து ஆராய இம்மாத ஆரம்பத்தில் டென்மார்க் தலைநகர் கொபன்ஹேகனில் ஐக்கிய நாடுகள் சபையினால் கூட்டப்பட்ட இருவார கால சர்வதேச மகாநாட்டில் உலக நாடுகளின் தலைவர்களினால் உடன்படிக்கையொன்றுக்கு வரமுடியவில்லை. அதனால் உலக மக்களுக்கு பெரும் ஏமாற்றமாகப் போய்விட்டது.

பூமியின் வெப்பநிலை சராசரியாக 3 சதம பாகை அதிகரிக்குமென்று காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் கட்டமைப்பு சாசனம் கூறுகின்றது. அவ்வாறு வெப்பநிலை அதிகரிக்கும்போது தற்போது உலகில் பட்டினியால் வாடும் சுமார் 102 கோடி மக்களுடன் மேலும் 55 கோடி பேர் சேர்ந்து கொள்வர். கடல் பெருக்கெடுப்பு காரணமாக கரையோரப் பகுதிகள் கடலில் மூழ்கும் ஆபத்து ஏற்படப்போகிறது. இதனால் சுமார் 17 கோடி மக்கள் பாதிக்கப்படப்போகிறார்கள் என்று 'காலநிலை மாற்றத்தின் விளைவாக ஏற்படக்கூடிய பொருளாதாரப் பாதிப்பு தொடர்பான மதிப்பீடு' தெரிவித்திருக்கிறது.

பயிர்ச் செய்கை கடுமையாகப் பாதிக்கப்படும். கடுமையான வெள்ளப்பெருக்கும் கொடிய வரட்சியும் மாறி மாறி உலகின் பல பிராந்தியங்களில் அழிவை ஏற்படுத்தப்போகிறது. இதனால் 2050 ஆம் ஆண்டளவில் 15 கோடி மக்கள் இடம் பெயர வேண்டிய நிலைமை உருவாகும் என்று காலநிலை மாற்றம் தொடர்பான அரசுகளுக்கிடையிலான குழு எச்சரிக்கை செய்திருக்கிறது. இன்னொரு மதிப்பீடு இடம்பெயரவேண்டிய நிலைக்குள்ளாகப் போகிறவர்களின் எண்ணிக்கையை சுமார் 20 கோடியென்று குறிப்பிட்டிருக்கிறது.

பாரதூரமான காலநிலை மாற்றம் பாரிய அகதிகள் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கப்போகிறது. திடீரென ஏற்படக்கூடிய இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்படுபவர்களை விடவும் காலநிலை மாற்றத்தின் விளைவாக படிப்படியாக ஆறுதலாக ஏற்படப்போகின்ற பாதிப்புகளினால் பாதிக்கப்படப்போகிறவர்களை அடையாளம் காண்பது பெரும் சிரமமானதாகும்.

அகதிகள் அந்தஸ்து தொடர்பில் சர்வதேச சட்டத்தில் வரைவிலக்கணங்கள் இருக்கின்றன. இந்த வரைவிலக்கணங்கள் 1951 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் இருந்துவரும் ஐக்கிய நாடுகள் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. காலநிலை மாற்றத்தின் விளைவாக அனர்த்தங்களினால் பாதிக்கப்படக்கூடியவர்களை அகதிகள் வரைவிலக்கணத்திற்குள் கொண்டுவருவதற்கு சட்டங்களிலும் சாசனங்களிலும் மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்று ஐ.நா.அதிகாரிகள் கூறுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நொதேர்ண் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் யாழ்ப்பாணம், கே.கே.எஸ். வீதி 336ஆம் இலக்கத்தில் 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.